# அரங்கம் செய்திகள்


தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, நவம்பர் 02, 2018. இதழ் - 37







**கீழக்கிலங்கையின் பழங்குடிகள் அல்லது பூர்வ குடிகள்**

பழங்குடிகள் என்போர், ஒரு நிலப்பகுதியில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து

பக்கம் - 04



**கொட்டியாரத்தின் வரலாற்று தொன்மையில் பெருங்கற்கால பண்பாட்டின் சம்பூர் சுடு மண் சிற்பங்கள்**


பக்கம் - 11



**மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரிய கல்வி வளர்ச்சி – சில அவதானங்கள்**

‘மாணவர்களுக்கேற்ற கல்விமுறைமை இலங்கையில் நடைமுறையிலிருந்திருந்தால்,

பக்கம் - 11



**கிழக்கு தமிழ் மக்கள் விக்னேஸ்வரனை செங்கம்பளம் விரித்து வரவேற்பார்களா?**

கொழும்பில் கடந்த வாரம் ஏற்பட்ட அரசியல்

பக்கம் - 03



## நவம்பர் 5இல் தமது பலத்தை நிரூபிப்போம் என்று இரு தரப்பும் அறிவிப்பு

இலங்கை நாடாளுமன்றம் முன்னர் திட்டமிட்டபடி நவம்பர் 5 ஆம் திகதி கூடும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தன்னை வியாழனன்று சந்தித்த வெளிநாட்டுத்தூதுவர்களிடம் கூறியுள்ளார்.

அதேவேளை புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமருக்கான ஆசனம் நாடாளுமன்றத்தில் வழங்கப்படும் என்றும் பிரதமருக்கான அனைத்து முன்னுரிமைகளும் அவருக்கு வழங்கப்படும் என்றும் பாராளுமன்ற சபாநாயகர் கூறியுள்ளார்.

ஒக்டோபர் 26ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ள நிலையில், அவருக்கு உரிய ஏற்பாடுகளை செய்வது தமது கடமையே என்று சபாநாயகரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க தூதுவர் அலியான டெப்லிஸ், ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா, பிரான்ஸ் தூதுவர் எரிக் லவ்ர்து, ஆப்கானிய தூதுவர் அஸ்ரப் ஹைதாரி ஆகியோர் பிரதமர் ராஜபக்ஷவை சந்தித்த போதே நாடாளுமன்றம் நவம்பர் 5 ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதை மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறியுள்ளார்.

இருந்தபோதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மொத்தமுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் தமக்கு ஆதரவாக 129 பேர் இன்னமும் இருப்பதாக கூறியுள்ளது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி என்ன சொன்னாலும் நவம்பர் 5ஆம் திகதி அதனை பாராளுமன்றத்தில் நிரூபித்தாக வேண்டும் என்று மஹிந்த - மைத்திரி அரசாங்கத்தை சேர்ந்த

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## 80 நாட்களைக் கடந்த பொத்துவில் தமிழர்களின் போராட்டம்!

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட கரையோரத்தின் அக்கரைப்பற்று – பொத்துவில் ஏ4 பிரதான சாலையில் அறுபதாம் கட்டை என்னுமிடத்தில் கனகர் கிராம தமிழ் மக்களின் காணி மீட்புப் போராட்டம் தொடங்கி 80 தினங்கள் கடந்துவிட்டன.

நேற்று(1) வியாழக்கிழமை 80ஆவது தினத்தில் அங்கு விஜயம் மேற்கொண்டு சமகாலநிலைவரம் தொடர்பில் கண்ணோட்டம் செலுத்தினோம்.

நேற்றிரவு அந்தப் பகுதியில் கனமழை பொழிந்திருக்கிறது. ஆனால் அந்த கனமழைக்கு மத்தியிலும் குளிர்கூதலுக்கும் மத்தியிலும் அவர்கள் போராட்டத்தைத் தொடர்வது அவர்களது வைராக்கியத்தை கட்டியம்கூறி நிற்கிறது.

அரசஅதிபரின் உத்தரவின் பேரில் அவர்களிடம் பல தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் யாவும் கடந்த 16ஆம் திகதி பொத்துவில் பிரதேசசெயலாளரிடம் கையளிக்கப்பட்டன. அவற்றில் உள்ள சில குறைநிறைகளை தற்போது சரிசெய்துவருதாக பேராட்டக்குழுவின் தலைவி றங்கத்தனா தெரிவித்தார். அதுவரை பொறுத்திருக்கிறோம். ஆனால் எமது போராட்டம் எமது சொந்தக்காணியைப் பெறும்வரை தொடரும் என்றார்.

இதுவரை பாராளுமன்ற உறுப்பினர் தொடக்கம் பல அரசியல்வாதிகள் சமுகசேவையாளர்கள் எனப்பலரும் வந்து கலந்துரையாடி, பல உறுதிமொழிகளையும் அளித்துள்ளார்கள். வனத்துறை



உயரதிகாரியும் அரசஅதிபரும் கிழக்கு காணி ஆணையாளரும் இக்காணியை மீளளிக்க உறுதி கூறியுள்ள நிலையிலும் போராட்டம் தொடர்கிறது.

அவர்கள் இரவுபகலாக அந்த காட்டுப்பகுதியின் வீதியோரத்தில் முகாமிட்டு தங்கியிருந்து போராட்டத்தை நடாத்திவருகின்றனர். அந்த முகாம் தற்போது இரண்டாகியுள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -03 )

## மேலும் வீழ்ச்சி கண்ட இலங்கை நாணயம்



இலங்கையில் தொடரும் அரசியல் நெருக்கடி காரணமாக இலங்கை நாணயம் வியாழனன்று மேலும் வீழ்ச்சி கண்டது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி 177.32 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. அரசியல் நெருக்கடி ஆரம்பித்தது முதல் ரூபாய் 1.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.




# ஊர் இரண்டுபட்டால் வெளியாருக்கே கொண்டாட்டம்

## மக்களுக்கு சங்கடமும் அவதியுமே!



இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு கட்சிசார் போட்டி அரசியல் காரணமென்கின்றனர் சிலர். வேறு சிலர் இது தனிப்பட்ட நலன்சார் விடயங்களோடு சம்மந்தப்பட்டது என்கிறார்கள். இன்னொரு சாரார் வெளிச்சக்திகளின் தலையீடு, உள்நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களின் விளைவுகளால் ஏற்பட்டது என்கிறார்கள். இன்னொரு தரப்பினர் இது அரசியல் அமைப்பிலுள்ள குறைபாடுகளின் விளைவானவை என்கிறார்கள். இதை விடவும் இன்னும் பல நோக்குகள் இருக்கக் கூடும். ஆனால், மேலே சொல்லப்பட்டிருக்கும் காரணங்கள் எவையும் புறக்கணிக்கக் கூடியவை அல்ல. இவற்றின் திரண்ட வடிவமே இன்றைய பிரச்சினை. அல்லது இவற்றின் செல்வாக்கே இன்றைய நெருக்கடிக்குக் காரணம்.

எதன் பேராலும் நெருக்கடிகளும் குழப்பங்களும் பிரச்சினைகளும் ஏற்படுவது வழமை. அது குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி, நாட்டிலும் சரி. ஆனால், அந்தப் பிரச்சினைகளையும் குழப்பங்களையும் நெருக்கடிகளையும் தீர்க்கும் முறைமை முக்கியமானது. அவற்றைச் சரியாகச் செய்கின்ற தரப்புகளும் தலைமைகளுமே கவனத்திற்குரியவை. அவையே மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வரலாறும் அவற்றையே ஏற்றுக்கொள்ளும்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கான பொறுப்பில் சரிபாதி முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரசிங்கவுக்குரியது. இதையே பேராசிரியர் ஜெயதேவ உயன்கொடவும் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார், “தனது அரசியல் உயிர்வாழ்வுக்கான அடுத்த நகர்வுகளைத் திட்டமிடும்போது விக்கிரமசிங்க தற்போதைய அரசியல் குழப்பநிலைக்கு ஓரளவுக்கு தன்மீதும் குற்றப்பொறுப்பு இருக்கிறது என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும்.

கூட்டரசாங்கத்தை நடத்துவதில் ஜனாதிபதியுடன் உறுதியானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான உறவுமுறையொன்றை ஏற்படுத்திக் கொள்வதில் விக்கிரமசிங்கவின் இயலாமை, ஊழலற்ற ஆட்சிமுறையையும் அரசியலையும் கொண்டுவருவதற்காக 2015 ஆம் ஆண்டில் சிறிசேனவும்



தானும் கூட்டாக மக்களிடம் பெற்ற ஆணையை அக்கறையுடன் நோக்காமல் அலட்சியம் செய்தமை, அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் நல்லிணக்கச் செயன்முறைகள் தொடர்பில் காட்டிய மெத்தனப்போக்கு, சிறந்த பொருளாதார முகாமைத்துவத்துக்கான மக்களின் கோரிக்கைகளை முற்றாக அலட்சியம் செய்தமை எல்லாம் சேர்ந்து மக்கள் மத்தியிலான விக்கிரமசிங்கவின் மதிப்பை அருகச்செய்துவிட்டன” என்று.

இந்தத் தவறுகளே இன்று ரணில் விக்கிரமசிங்கவை நிலைகுலைய வைத்திருக்கின்றன. 49 உறுப்பினர்களோடு எதிர்க்கட்சி வரிசையில் இருந்த ரணில் 201 இல் பிரதமராகியதை யாரும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரலாம். அன்று இந்த மாற்றங்களுக்காக உச்ச விலையைக் கொடுத்திருந்தவர்கள் மைத்திபால சிறிசேனவும் ராஜித சேனரத்தினவும் மாற்றத்துக்காக வேலை செய்ய தரப்பினருமே. ஒப்பீட்டளவில் இதற்கான நலன்களையும் பலன்களையும் அனுபவித்தவர் ரணில் விக்கிரமசிங்கவே.

ஆனால் அவர் அதிகாரத்துக்கு வந்த பிறகு தன்னை (பிரதமர் பதவியை) மட்டும் பாதுகாப்பதிலேயே முனைப்புக் காட்டினார். இதன்படி 19 ஆவது திருத்தம் செய்யப்பட்டது. இதில், ஜனாதிபதி தன்னுடைய விருப்பத்தின்படி பிரதமரைப்

**கருணாகரன்**

பதவி நீக்கம் செய்ய முடியாது என்ற உத்தரவாதம் கிடைத்ததுடன் ஏனைய விடயங்களைக் குறித்து ரணில் கவலைப்படவில்லை. நாட்டில் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளைப் பற்றியோ நாட்டிற்குத் தேவையான ஏனைய விடயங்களைப் பற்றியோ பெரிதாக அக்கறைப்படவில்லை. பதிலாக வெளிச்சக்திகளுக்கு இசைவாக அரசாங்கத்தை வழிநடத்துவதற்கே முயற்சித்தார். இதையிட்டு மக்களுக்கு அதிருப்திகள் மேலோங்கின. இதைப்பற்றிய விமர்சனங்களை பலரும் முன்வைத்தபோதும் அவற்றைக் கவனத்திற் கொள்ளத் தவறினார். இதையே உயன்கொடவும் சுட்டிக்காட்டுகிறார்.

இதனால் எதிர்த்தரப்பாகிய பொதுஜன பெரமுனவினருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் ஆட்சியில் தலையீடுகளைச் செய்வதற்கான வாய்ப்புகள் தாராளமாக உருவாகின. இதுவே இன்றைய நெருக்கடிக்குப் பிரதான காரணம். இதைக் கையாண்ட முறை தொடர்பாக மைத்திரி – மகிந்த ராஜபக்ஸ ஆகியோர் மீது ஏராளம் விமர்சனங்கள் உண்டு. இதற்கு இலங்கையின் கலங்கலான – தெளிவற்ற அரசியலமைப்பே பிரதான காரணம் அல்லது கூடுதல் வாய்ப்பை அளித்தது எனலாம். இலங்கையின் அரசியலமைப்பு இந்த மாதிரிப் பல இடங்களில் குழப்பமானதாகவே உள்ளது. அண்மைய உதாரணம், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வரையப்பட்ட உத்தேச அரசியல் யாப்பில் “ஒற்றையாட்சி, ஒருமித்த ஆட்சி” என்ற வார்த்தைகளை மையமாக வைத்து நடத்தப்பட்ட குழப்பங்கள். இதில் சிங்களத்தில் ஒரு விதமாகவும் அதைத் தமிழில் இன்னொரு விதமாகவும் ஆங்கிலத்தில் இன்னொரு பொருளிலும் சித்திரிக்க முற்படுவது. இவ்வாறு பல ஓட்டைகளை வைத்து உருவாக்கப்பட்ட அரசியலமைப்பை சந்தர்ப்பத்துக்குத் தக்க மாதிரி, நிலைமை, சூழல் என்பவற்றுக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அதிகாரத் தரப்பினர் கருதியிருந்தனர். இது இப்பொழுது அவர்களுக்கே பிரச்சினையாகி விட்டது.

உண்மையில் ஒரு அரசியலமைப்பானது, நாட்டின் செழுமைக்கு அடிப்படையானது. உயிர் நாடியைப் போன்றது. அரசியலமைப்பானது, தேவையான இடத்தில் நெகிழாத்தன்மையும் தேவைவான இடத்தில் நெகிழ்ச்சித் தன்மையும் உடையதாக இருக்க வேண்டும். பல்லின மக்கள் வாழும் நாட்டிற்கேற்ப கூட்டாட்சியும் ஒருமுகத்தன்மையும் கொண்டதாயிருத்தல் அவசியம். பொறுப்புள்ள அரசாங்கத்தை உடையதாக அமைய வேண்டும். இந்த அடிப்படையில் பரந்த மனதோடு உருவாக்கப்படாத இலங்கை அரசியல் சாசனம் பெரும்பான்மை சமூகத்துக்கும் கேடாகவே உள்ளது. இந்தச் சூழலோடு அரசியல் சாசனத்தை அனைத்துச்

தொடர்ச்சி... (பக்கம் -04 )

## 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 17 வயது சிறுவன் கைது

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள இருதயபுரம் பிரதேசத்தில் 15 வயது சிறுமியை ஆசை வார்த்தை காட்டி பாலியல் துஸ்பிரயோம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவனை நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

தரம் 10 ம் ஆண்டில் கல்வி கற்று வரும் சிறுமியை குறித்த சிறுவன் ஆசைவார்த்தை காட்டி சிறுமியை கடந்த 18ம் திகதி அழைத்துச் சென்று வாழைச்சேனை பிரதேசத்தில் வீடு ஒன்றில் வைதது பாலியல் துஸ்பிரயோம் மேற்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மட்/ புனித சிசிலியாவில் பயிற்றும் வகுப்பு



இவ்வருடம் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்துக்குத் தோற்றும் மட்/ சிசிலியா பெண்கள் கல்லூரியின் மாணவிகளுக்கான பயிற்றும் வகுப்பு அக்கலூரியில் வியாழக்கிழமை நடந்தது. பாட வளவாளராக திரு. த. யுவராஜன் கலந்துகொண்டார்.

## விபுலாநந்தா மாணவி முகுர்த்தனாவிற்கு தங்கப்பதக்கம்!



அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டி வெற்றியாளர்களுக்கான விருதுவழங்கல் விழாவில் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி மாணவி செல்வி ரவீந்திரன் முகுர்த்தனாவிற்கு கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஸ்ணன் தங்கப்பதக்கத்தை வழங்குவதைக்காணலாம்.
படங்கள் காரைதீவு நிருபர் சகா)

## ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா



மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக அப்போதைய கல்வி அமைச்சர் ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டிருந்தார். அப்போது பிடிக்கப்பட்ட சில படங்கள். அதிபர் திருமதி என். தர்மசீலனும் படத்தில் காணப்படுகின்றார்.

தொடர்ச்சி...

## நவம்பர் 5இல் தமது பலத்தை நிரூபிப்போம் என்று இரு தரப்பும் அறிவிப்பு

கெகலிய ரம்புக்வெல்ல கூறியுள்ளார். ஆட்சியை அமைக்க தேவையான 113 உறுப்பினர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாகவும், அதனைவிட மேலும் உறுப்பினர்களும் தமக்கு ஆதரவு தருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கிழக்கு தமிழ் மக்கள் விக்னேஸ்வரனை செங்கம்பளம் விரித்து வரவேற்பார்களா?

கொழும்பில் கடந்த வாரம் ஏற்பட்ட அரசியல் கலவரங்களால் வடக்கு மு.முதலமைச்சர் விக்னேஸ்வரனின் புதிய அரசியல் கட்சி அறிவிப்பு பற்றிய பரபரப்பு மங்கிப்போய் விட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்களால் அரசியலுக்கு கொண்டு வரப்பட்டு, முடிசூடப்பட்டு வடக்கின் முதலமைச்சர் ஆக்கப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி புதிய கட்சியை ஆரம்பித்திருக்கிறார். அதற்கான அறிவிப்பை அவர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் நல்லூரில் நடந்த கூட்டத்தில் அறிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்கத்தாம்பாளத்தில் வைத்து வழங்கிய முதலமைச்சர் பதவியை முழுமையாக அனுபவித்து விட்டு மாகாணசபையின் பதவிக்காலம் முடிவடைந்த இறுதி நாளில் தனது புதிய கட்சி பற்றி மு.முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவித்து உரையாற்றியிருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் மாவீரர் தின உரையில் எனதன்பிற்கு இனிய தமிழ் மக்களே என விழித்து உரையாற்றுவதை போல அதேபாணியில் விக்னேஸ்வரன் உரையாற்றியிருந்தார்.



தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தவறு செய்து விட்டார்கள், துரோகம் செய்து விட்டார்கள் எனவே எனது தலைமையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய கட்சியை வடக்கு கிழக்கு மக்கள் ஆதரிக்க வேண்டும் என்றும் தனது 32 நிமிட உரையில் வரிக்கு வரி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீதே தனது எறிகணையை வீசியிருக்கிறார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கொள்கைகளுக்கு விசுவாசமாக இதுகாறும் நடந்திருந்தார்களேயானால் நான் ஒய்வு பெறப் போயிருப்பேன். ஒரு கட்சியை உருவாக்க என்னை கட்டாயப்படுத்தி விட்டார்கள் கூட்டமைப்பினர்! எனது குறிக்கோள்கள் சரி என்றால் மக்கள் என் பக்கம் சார்வார்கள். இல்லையேல் என்னை ஒதுக்கி விடுவார்கள். அது மக்களின் விருப்பம்' என பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின லெவலுக்கு தனது உரையை நிகழ்த்தியிருந்தார்.

விக்னேஸ்வரனை முன்னிறுத்தி அரசியல் செய்யும் புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களும், தமிழ் மக்கள் பேரவையினரும் வடக்கு மு.முதலமைச்சரை தமிழ் மக்களின் தேசியத்தலைவர் விக்னேஸ்வரன் தான் என்ற நிலையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.



தமிழ் மக்களின் தேசியத்தலைவராக தன்னை கற்பனை செய்து கொண்டிருக்கும் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களால் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக உருவெடுக்க முடியுமா?

**இரா.துரைரத்தினம்**

கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் அவரின் தலைமையை ஏற்றுக்கொள்வார்களா என்பதே இன்றைய கேள்வியாக இருக்கிறது.

கிழக்கில் இன்று தமிழ் மக்களின் பெரும்பான்மையான ஆதரவை பெற்றவர்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே உள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்த நிலையில் குறிப்பிட்டளவு மக்கள் ஆதரவை பெற்றவர்களாக பிள்ளையான் குழுவினர் உள்ளனர்.

இந்நிலையில் விக்னேஸ்வரன் ஆரம்பித்திருக்கும் தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சிக்கு கிழக்கு மக்கள் ஆதரவை வழங்குவார்களா? விக்னேஸ்வரனை கிழக்கு மக்கள் செங்கம்பளம் விரித்து வரவேற்பார்களா?

மாவட்ட ரீதியிலான முதலாவது தேர்தல் நடத்தப்பட்ட 1989ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதனை தொடர்ந்து 2001ஆம் ஆண்டின் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்புமே கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவை பெற்ற கட்சிகளாக விளங்கி வந்திருக்கின்றன. (2008ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி நடத்தப்பட்ட கிழக்கு மாகாணசபை தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாததால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வெற்றி பெற்றிருந்தது )

கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிட்டால் தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்து கொள்ள முடியாது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்ததன் விளைவாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாகியது என்பதை பலரும் இன்று மறந்து விட்டார்கள்.

யாழ். மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் நூறாக பிரிந்து நின்று போட்டியிட்டாலும் அங்கு தெரிவு செய்யப்படுபவர்கள் தமிழராகத்தான் இருப்பார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்டால் என்ன ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்டால் என்ன அல்லது ஈ.பி.டி.பியிலிருந்து தெரிவு செய்யப்பட்டால் என்ன அவர்கள் அனைவரும் தமிழர்களாகவே இருப்பார்கள்.

ஆனால் கிழக்கில் நிலைமை அவ்வாறு இல்லை. தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்பட்டால் தமிழர் அல்லாதவர்தான் தமிழர்களின் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். இந்த சூத்திரத்தையும் இதனால் ஏற்படும் பாதிப்பையும் உணர்ந்துதான் தமிழ் கட்சிகள் ஒரே அணியில் இணைந்து செயற்பட வேண்டும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண பலமான அரசியல் தலைமை ஒன்று இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே 2000ஆம் ஆண்டு தேர்தல் படிப்பினைகளை அடுத்து 2001ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான வித்து கிழக்கில் தான் விதைக்கப்பட்டது. எந்த அரசியல் கட்சிகளையும் சாராத நடுநிலையாளர்களாக செயற்பட்ட கிழக்கு பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் என சிலரின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் விளைவாக 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி கொழும்பில் பிரபல வர்த்தகர் வடிவேற்கரசன் வீட்டில் நான்கு கட்சிகள் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

கடந்த 17வருடகாலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து சில கட்சிகள் பிரிந்து சென்றிருக்கின்றன. புதிய கட்சிகள் இணைந்திருக்கின்றன. பிளவுகள், பிரிவுகள் விமர்சனங்கள் இருந்தாலும் இன்று வரை தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்ட கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பே விளங்கி வருகிறது.

தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற தேவையும் கோரிக்கையும் கிழக்கில் தான் காணப்படுகிறது.

அண்மையில் கூட தமிழ் கட்சிகள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என கிழக்கு தமிழர் ஒன்றியம் என்ற அமைப்பு முயற்சிகளை எடுத்திருந்தது. அந்த அமைப்பில் எந்த அரசியல் கட்சிகளையும் சாராத நடுநிலையாளர்கள் ஏற்பாட்டாளர்களாக இருந்திருந்தால் சில வேளை அது வெற்றியளித்திருக்கலாம்.

கிழக்கில் ஒற்றுமையுடன் செயற்பட்டு தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் இன்றும் உயிர்ப்புடன் இருக்கும் நிலையில் தமிழ் வாக்குகளை சிதறடிக்கும் வகையில் கிழக்கு தேர்தல்களில் விக்னேஸ்வரனின் கட்சியும் களமிறங்குவதற்கு கிழக்கு தமிழ் மக்கள் ஆதரவை வழங்குவார்கள் என நம்புவதற்கு இல்லை.

விக்னேஸ்வரனின் ஆதரவு தளம் என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது அதிருப்தி அடைந்தவர்களை கொண்ட மக்கள் கூட்டத்தை கொண்டதுதான். கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியும் அத்தகைய ஒரு தரப்பை இலக்கு வைத்தே செயற்பட்டு வருகிறது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஷ், தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்த பின் கிழக்கில் முக்கியமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 8வருடங்களாக கால் ஊன்ற முடியாதவர்களாகவே உள்ளனர்.

தமிழ் வாக்குகளை சிதறடிக்க போகும் விஷச்செடி ஒன்றை கொண்டு வந்து நாட்டுவதற்கு எந்த ஒரு கிழக்கு தமிழரும் தயாராக இருப்பார்கள் என நான் நம்பவில்லை.

எனவே விக்னேஸ்வரன் அவர்களை செங்கம்பளம் விரித்து கிழக்கு மக்கள் வரவேற்கப்போவதில்லை. கிழக்கில் அவருக்கான ஆதரவு தளம் என்பது பூச்சியம் தான்.

தொடர்ச்சி...

## 80 நாட்களைக் கடந்த பொத்துவில் தமிழர்களின் போராட்டம்!

பால்கொடுக்கும் குழந்தைகள் தொடக்கம் தள்ளாடும் வயோதிபர்கள் வரை அங்கு பங்கேற்றுள்ளனர்.

அரசஅதிபரின் விஜயம்!
அங்கு இறுதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாரநாயக்க, கிழக்குமாகாண காணி ஆணையாளர் தர்மகுமார, உதவிஆணையாளர் ரவிராஜ் உள்ளிட்ட குழுவினர் வந்து பார்த்து கலந்துரையாடிய விடயங்களையிட்டு மக்கள் நம்பிக்கை கொண்டவர்களாகவுள்ளனர்.

அதாவது இங்கிருக்கக்கூடிய 30 வீட்டுத்திட்டத்தில் இருந்தவர்களுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. அதனை விடுவிக்கலாம். ஆனால் அதைவிட மொத்தமாக 278குடும்பங்கள் வாழ்ந்துள்ளன. அவற்றை உறுதிப்படுத்துவதற்கு சில ஆவணங்கள் தேவை. பெர்மிட் அல்லது அங்கிருந்ததற்கான பக்கத்து காணிச்சொந்தக்காரர்களின் பெர்மிட், அங்குவாழ்ந்தபோது எடுத்த பிறப்பு இறப்பு விவாகச்சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது புனர்வாழ்வுக்காக பெற்றுக்கொண்ட கடன் உதவி சான்றிதழ் அல்லது வாக்காளர் அட்டை இப்படி ஏதாவது ஒரு ஆவணத்தையாவது காட்டுகின்ற பட்சத்தில் அதனை பரிசீலனைசெய்து காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

விரைவில் சாதகமான விடயங்கள் நடக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் உள்ளனர்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : ஓர் அரசியல் வெட்டுமுகம் - பகுதி 25 (இறுதிப்பகுதி)

இதுகாறும் முன்வைக்கப்பட்ட விடயங்களும் விளக்கங்களும் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் அரசியல் வெட்டுமுகத்தைப் போதியளவு புரிந்துகொள்ளும் வகையில் இப்பத்தி எழுத்தாளரினினால் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் எதிர்கால சமூக பொருளாதார அரசியல் இருப்பிற்கும் பின்வரும் விடயங்கள் பிரதானமானவை.

தற்போது உப அலுவலகமாக செயற்படும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகப் பிரிவு தரமுயர்த்தப்பெற்று, அதன் அடிப்படையில் தனியான தமிழ்ப் பெரும்பான்மை உள்ளூராட்சி அலகும் (பிரதேச சபை) ஏற்படுத்தப்பெறவும் வேண்டும். தற்போதுள்ள சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பெற்று மல்வத்தையை மையமாகக் கொண்டு, முன்னைநாள் மல்வத்தை கிராமசபையில் அடங்கியிருந்த பிரதேசங்களுடன் வீரமுனைக் கிராமமும் இணைந்ததாக புதிய தமிழ்ப்பெரும்பான்மை மல்வத்தைப் பிரதேச செயலகப் பிரிவும் அதனை அடிப்படையாக வைத்துப் புதிய உள்ளூராட்சி அலகும் (மல்வத்தை பிரதேசசபை) ஏற்படுத்தப்பெற வேண்டும். தற்போதைய பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட்டு, முன்னைநாள் பாணமைப் பற்றுக் கிராம சபையில் அடங்கியிருந்த, தற்போதுள்ள பொத்துவில் பிரதேச சபைக்குள்ளும் அடங்கியிருப்பதுமான பகுதிகள் உள்ளடங்கலாகும் வகையில் கோமாரியை மையமாகக் கொண்டு ஒரு புதிய தமிழ்ப் பெரும்பான்மை பிரதேச செயலகப் பிரிவும் (கோமாரி) அதனை அடிப்படையாகக் கொண்ட புதிய உள்ளூராட்சி அலகும் (கோமாரி பிரதேசசபை) ஏற்படுத்தப் பெறவும் வேண்டும்.

மேலும், கல்முனை வடக்குத் தமிழ்ப் பிரிவு (உப பிரதேச செயலகம்) முழுமையான அதிகாரம் கொண்ட பிரதேச செயலகப் பிரிவாக தரமுயர்த்தப்பெறும் வரை, அதற்கு முன்னதாக சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி அலகு அமைவதும் உத்தேச கல்முனை நகர அபிவிருத்தித்திட்டம் நிறைவேற்றப்படுதலும் கல்முனைத் தமிழர்களின் இருப்புக்கு ஆபத்தானதாகும். மட்டுமல்லாமல், மேற்கூறப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புக்களும், உள்ளூராட்சிக் கட்டமைப்புக்களும் அதாவது கல்முனை, மல்வத்தை மற்றும் கோமாரி என்பன ஏற்படுத்தப்பெறாமல் முஸ்லிம் அரசியல் கட்சிகளினால் முன்வைக்கப்பெற்றுள்ள கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கைக்கு அம்பாறை மாவட்டத் தமிழர்கள் ஆதரவு அளிக்க முடியாது. அதேபோல் இனப்பிரச்சினைக்கான தீர்வாக வடக்கு, கிழக்கு இணைந்த அதிகாரப் பகிர்வு அலகு எட்டப்படும் வரை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் முன்வைக்கப்பெற்ற தென்கிழக்கு அலகு அல்லது தென்கிழக்கு மாகாணக் கோரிக்கைக்கும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் ஆதரவு வழங்க முடியாது. ஆனால், தமிழ் அரசியல் தலைமையை ஏற்றிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு



இந்த விடயங்களில் அக்கறை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அம்பாறை மாவட்டத் தமிழர்களின் தேவைகளை வென்றெடுக்கும் அரசியல் வல்லமையோ, அரசியல் விருப்பமோ தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை என்பதே கடந்த கால அனுபவங்கள் வெளிப்படுத்தும் யதார்த்தமாகும்.

இந்தப் பின்னணியில் "அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்" என்பதற்கிணங்க அம்பாறை மாவட்டத்தமிழர்கள் இனிமேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை நம்பியிராது, தனியான அரசியல் பாதை ஒன்றினை - அணுகுமுறை ஒன்றினை வகுத்துக்கொள்வது அவசியமாகிறது.

அது பின்வருமாறு அமையலாம். அம்பாறை மாவட்டத் தமிழர்களைப் பொறுத்தவரை தொகுதிவாரித் தேர்தல் முறையின் கீழென்றாலும் சரி - விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழென்றாலும் சரி - உத்தேச கலப்புத் தேர்தல் முறையின் கீழென்றாலும் சரி ஒரெயொரு தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையே பெற சாத்தியம் உள்ளது. அந்த ஒரெயொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்தவராக இருந்தால் அப்பதவி கதிரைக்கு பாரமாக இருக்குமே தவிர, அப்பதவியினால் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு எந்த அனுகூலங்களும் கிடைக்கப்போவதில்லை. கடந்தகால மற்றும் தற்கால அனுபவங்களின் அடிப்படையில் இதுவே உண்மையாகும்.

அப்படியானால் மாற்றுவழி யாது? அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் புனரமைக்கப்பெற்று அல்லது அது போன்றதொரு அமைப்பு உருவாகி மேற்கிளம்பி அதனூடாகப் பாராளுமன்றத்தேர்தலில் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் சார்பில் "சுயேட்சைக்குழு'வொன்று நிறுத்தப்பெற்று, அதனூடாக தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் ஒன்றை

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

வென்றெடுத்து, வெற்றிபெறும் அப்பாராளுமன்ற உறுப்பினர், மத்தியில் ஆட்சியமைக்கும் அரசாங்கத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத் தமிழர்களின் நிறைவேற்றப்பெறாத கோரிக்கைகளை அவருக்கு கிடைக்கக்கூடிய அரசியல் அதிகாரத்தையும் அரசியல் செல்வாக்கையும் அதி உச்சமாகப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும்.

இந்த அறிவுபூர்வமான சமன்பாட்டைப் பற்றி எழுத்தாளர் 1994 இலேயே அறிமுகப்படுத்தி, 1994 மற்றும் 2000 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல்களின் போது அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் சுயேட்சைக்குழுவுக்கு தலைமைதாங்கி

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கிழக்கிலங்கையின் பழங்குடிகள் அல்லது பூர்வ குடிகள்

பழங்குடிகள் என்போர், ஒரு நிலப்பகுதியில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருபவர்களாவர். பூர்வ குடிகள் என்போர், ஒரு நிலப்பகுதியின் அசல் குடிமக்களாவர். அதாவது பூர்வ குடிகள் குடியேறிய, ஆக்கிரமித்த அல்லது காலணித்துவப்படுத்திய மக்கள் அல்லாதோராவர். பழங்குடிகள் ஒரு நாட்டில் பன்னெடுங்காலம் வாழ்ந்து வருபவர்கள் என்ற வகையில், பூர்வ குடிகளாகவும் அமைவர். ஐக்கிய நாடுகள் சபையானது உலகனைத்தும் உள்ள பழங்குடிகளை பூர்வகுடிகள் என்று அடையாளங் காணப்பட வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது.

இந்த விளக்கத்தினைக் கவனத்தில் கொள்ளும் போது சில சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியவர்களாகின்றோம். மேலைத்தேச நாடுகளில் பன்னெடுங்காலம் வாழ்ந்து வருகின்ற பழங்குடிகளுக்கும் அண்மைக் காலங்களில் குடியேறியோர்களுக்கும் இடையிலான தெளிவான வேறுபாடுகளை அவதானிக்கலாம். இதனால் பழங்குடியினரை அங்கு பூர்வ குடிகளாகவும் கொள்வது இலகுவானது. ஆனால் பன்னெடுங்காலமாக குடியேற்றம் நிகழ்ந்த இலங்கையில் இது ஒரு சிக்கலான விடயமாக அமைந்து விடுகிறது. பழங்குடிகள் அல்லது பூர்வ குடிகள் பற்றிய ஆய்வில் இன்னும் சில சிக்கல்களை நாம் எதிர்நோக்க வேண்டியவர்களாகின்றோம். அவை அடையாளச் சிக்கல்களாகும். பக்தவத்சல பாரதி அவர்கள் "பழங்குடிகளின் பெயர்கள் மற்றவர்களால்



பல்கிப் பெருகிய நிலை ஒருபுறமிருக்க, பல பழங்குடிகள் பொத்தாம் பொதுவாக அழைக்கப்படும் அடையாளச் சிக்கலும் மறுபுறம் காணப்படுகின்றது. இருளர், காட்டு நாயக்கன், மலைவேடன், மலைக்குறவன் போன்ற பழங்குடியினர் பலரும், வெளியாரால் 'வேடன்' என்றும் கூட அழைக்கப்படுவதுண்டு. இப்பழங்குடிகள் அனைவரும் வேட்டையாடும் தொழிலைக் கொண்டிருப்பதால் அயல் சமூகத்தார் சுருக்கமாக 'வேடன்' என்கின்றனர்." [பக்:72] எனக்குறிப்பிடுகிறார்.

இலங்கையிலும் இத்தகைய பொதுமைப்படுத்தும் வெளியார் அடையாளப் படுத்தல் ஏற்பட்டிக்கிறது என்பதற்கு வேடர் என்ற சொல் பிரயோகத்தின் பரந்த பயன்பாடு சான்றாக அமைகிறது. "இவ்வேடர் தம்மை எப்பெயர் கொண்டழைத்தனரோ தெரியவில்லை. ஆயின் சிங்களர் கொடுத்த பெயரே இவர்களுக்கு வழங்கிவரலாயிற்று." எனக்குறிப்பிட்டிருக்கிறார் மெண்டிஸ் [பக்: 1-2]

"இத்தகு பொதுமைப்படுத்தும் வெளியாரின் பார்வை பொதுப்புரிதல் சார்ந்தது; அனைவரையும் பொதுமைப்படுத்திக் காண்பது. பொதுமையாக்கம் என்பது அவர்களின் தனித்துவத்தை நிராகரிக்கும் காலணிய மனநிலை சார்ந்ததாகும். இத்தகைய பொதுமையாக்கத்தைக் கைவிடுவது மிகவும் அவசியமாகும். அவரவர் பெயராலேயே அழைக்கப்படுவது அவசியமாகும்." என்கிறார் பக்தவத்சல பாரதி [பக்:72] அவர்கள்.

பாளி மற்றும் தமிழ் மொழியலெழுந்த ஆரம்பகால இலங்கை வரலாற்று நூல்களில், பூர்விக குடிகளை வேடர் எனக் குறிப்பிடும் வழக்கு இருக்கவில்லை என்பது சுவாரஸ்யமானதொன்றே. இந்நூல்கள் இலங்கையின் பூர்வ குடிகள் இயக்கர், நாகர் என்றே குறிப்பிடுகின்றன. இயக்கரும் நாகரும் வேட்டையாடும் சமூகமாக அன்றி, வளர்ச்சி பெற்ற ஒரு சமூகமாகவே காட்டப்படுகின்றனர்.

**கிரான் விஜய்**

இத்தகைய சிக்கல்களைக் கவனத்தில் கொண்டு இலங்கையினதும் கிழக்கிலங்கையினதும் பழங்குடிகள் அல்லது பூர்வ குடிகள் பற்றிய தேடலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையின் பழங்குடிகள் அல்லது பூர்வ குடிகள் பற்றிய தகவல்கள் இலங்கையின் பண்டைய வரலாற்றைக் கூறும் நூல்களில் காணப்படுகின்றன. எச்.டபிள்யு.கொடிறின்றன், 'கௌதம புத்தர் வருகை அல்லது அவருக்கு முந்திய புத்தர்களின் வருகைகளைப் பற்றி வரலாற்றுச் சான்றுகள் கிடையா. பழங்கதைகளின் படி இந்நாட்டின் பழங்குடி மக்கள் இயக்கர், நாகர், தேவர் ஆகியோராவர். இப்பெயர்களில் யாதாயினும் உண்மை மறைந்திருக்கலாம். (பக்-6) எனக்குறிப்பிடுகின்றார். இவர்களில் "தேவர்" பற்றிய தேடல்கள் நடைபெறவில்லை என்றே குறிப்பிடலாம். குவேனியின் பிள்ளைகளின்

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## மழை வரமா பாதகமா ?

'மழையும் பெய்யுது, பயிரும் வளருது, அறுவடை முடிஞ்சு வீடுவந்து சேர்ந்தால்தான் இனி நிம்மதி' என வெள்ளையனும், வீரசிங்கமும் ஆயித்தியமலைச் சந்தியில் நின்று பேசிக்கொண்டனர். இருவரும் வேளாண்மை செய்திருக்கின்றனர். இச்செய்கையினால் வருடாந்தம் பல்வேறு துன்பதுயரங்களை அனுபவித்தாலும், வேளாண்மைச்செய்கையை இவர்கள் கைவிட்டுவிடவில்லை. 'உழவன் சேற்றில் கால் வைத்தால்தான் மற்றவர்கள் சோற்றில் கை வைக்கமுடியும்', இதனைக்கூறி தம்மைத்தாமே பெருமைப்படுத்திக் கொள்ளும் இருவரும் வருடாந்தம் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் பேசிக்கொண்டிருந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப்பகுதி மக்கள் பெரும்பாலானவர்கள் விவசாயத்தினையே நம்பி உயிர்வாழ்கின்றவர்கள். மாறாக விவசாயம் செய்வதற்கு பணவசதி படைத்தவர்கள் அல்லர். ஆனாலும் கடன்களைப்பெற்று விவசாயத்தில் ஈடுபடுவதனையே இற்றைவரை செய்துவருகின்றனர்.

2018, 2019ஆம் ஆண்டிற்கான பெரும்போகச் செய்கைக்காலம் ஆரம்பித்துள்ளமையினால், வேளாண்மை உற்பத்தி, மேட்டுநில பயிர்ச்செய்கைகான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, நாற்றுக்கள் விதைக்கப்பட்டுள்ளன. நாற்றுக்களும் முளைத்து சிறுபயிராகியிருக்கின்றன. இப்பயிர்கள் வளர்ந்து, நெற்கதிர்கள் வெளியாகி, அறுவடை செய்வதற்கு அடுத்த வருடம் தை, மாசி மாதங்கள் செல்லும். அறுவடை செய்து முடியும் வரைக்குமான காலப்பகுதியில் பல்வேறு துன்ப, துயரங்களையும் அனுபவிக்க வேண்டியவர்களாக விவசாயிகள் காணப்படுகின்றனர்.

வானத்தினை நம்பியே அதிகளவான விவசாயிகள் பெரும்போக வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுகின்றமை வழமை. இவ்வருடமும் விண்ணை அவதானித்து, விண்ணிலிருந்து மண்ணில் வீழ்ந்த நீர்த்துளிகளைக் கண்ணுற்று வயலை உழுது, நெல்லை மண்ணிலே இட்டிருக்கின்றனர். சிலர் நாற்றினை விதைத்தநேரம் மண்ணிலே ஈரமில்லை. இதனால் நாற்றுக்கள் முளைத்தமையும் குறைவு. ஆனாலும் பலர் விதைத்த நேரம் மண்ணில் ஈரமிருந்தமையால், நெல்நாற்றுக்கள் வளர்ந்திருக்கின்றன. தொடர்ச்சியாக பயிர்கள் வளர்ந்து செல்வதற்கு நீர் அவசியமானதொன்றாக காணப்படுகின்றது. இந்நீர் அளவுக்கேற்றால்போல் கிடைத்துவிட்டால் மனதிலே விவசாயிகளுக்கு மகிழ்ச்சியேற்பட்டுவிடும். மழை ஆரம்பித்துவிட்டால் முதல்நாளில் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியேற்பட்டாலும், தொடர்ந்து மழை நீடித்தால் மனதிலே பயமும், பயங்கரமும், கவலையும், வெறுப்பும், வேதனையும், ஏமாற்றமும் விவசாயிகளை வளைத்துபிடித்துவிடும். இதற்கு அதிக மழை வெள்ளமாக மாறிவிடுமோ? வெள்ளத்தால் வரம்புகள் உடைந்து பயிர்களை மண்மூடி, நீரில் பயிர்கள் நின்று அழுகி விவசாயச் செய்கை அழுந்துவிடுமோ? என்ற கடந்த கால அனுபவங்களினால் அவ்வாறான துன்பவியல் வலைக்குள் விவசாயிகள் அகப்பட்டு விடுகின்றனர். அதேபோன்று நீண்ட நாள் மழைபெய்யாதிருந்தாலும் விவசாயிகளின் முகமும் வாடிவதங்கி இடிவிழுந்தவர்களைப் போன்றோராகிவிடுவர். இந்நிலையில் இறைவனைத்தேடியோடுவர், நேர்த்திகளை வைப்பர், அதிலும் குறிப்பாக தாந்தாமலை முருகன் ஆலயத்தினை நோக்கி, மழைவேண்டி பூசை செய்வதற்காக பலர் செல்வர். அவ்வாறு செய்ததன் விளைவாக வருடாந்தம் மழைகிடைக்கப்பெற்றமை வரலாறு. மழை நீண்ட காலம் கிடைக்காது





சென்றால், பயிர்கள் வாடும், நோய்களும் தாக்கும், விவசாயச் செய்கையும் வீழ்ச்சிகாணும், கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடந்தமையும் உண்மையே.

பயிர்வளர்ந்து அறுவடை செய்யும் வரை விவசாயிகள் வீட்டில் இருக்கமாட்டர்கள், வயல்களிலே அமைக்கப்பட்டுள்ள பரண்களிலும், புரைகளிலுமே இவர்களது வாழ்க்கை கழியும். பயிர்களோடு பிள்ளைகளோடு பேசுவதுபோன்று பேசி அகமகிழ்வர். ஒவ்வொரு நாளும் வயல்களை வளைத்துப்பார்ப்பர். அச்செயற்பாட்டினால் அதிககூடிய நெல்விளைச்சலைப் பெற்றுக்கொள்வார். அதேவேளை இரவுவேளைகளில் வேளாண்மையை யானைபோன்ற மிருகங்கள் அழித்துவிடும் என்பதற்காக இரவுநேரக்காவல்பணிகளிலும், தமது உயிரைப் பணயம் வைத்து, மழையில் நனைந்தும் காவல்புரிவர். நெற்பயிரும் குடலைப்பருவத்தினை அடையும் வேளை எங்கிருந்தோ பறவைகள் கூட்டமாய் வயல்களில் வீழ்ந்து நெல்மணிகளை கொத்திச்செல்ல ஆரம்பிக்கும், அவற்றிலிருந்து பயிரை தப்ப வைத்துக்கொள்வதற்காக பகல்நேர காவலிலும் ஈடுபடவேண்டிய நிலையேற்படும்.

குருவிக்காவலும் நிறைவுபெற்றதன் பின்பு அறுவடைக்கு அண்மித்த காலங்களில் மீண்டும், வானத்தினை அவதானிக்க வேண்டும். இக்காலப்பகுதியில் அறுவடை செய்வதற்கு முன்னர் எல்லாம் மனிதர்களையே பயன்படுத்தினர். தற்போதெல்லாம் இயந்திரங்கள் வருகை என்பதினால் ஒன்றிற்குமேற்பட்ட நாளில் நிறைவுபெறும் வேலைகள், ஒரு மணித்தியாலத்தில், ஒருபொழுதில் நிறைவுபெற்றுவிடும். ஆனாலும் மழைபெய்தால் அறுவடை செய்யமுடியாத நிலையைப்பெறும். சிலநேரங்களில் அறுவடை இயந்திரங்களை தேடி அலையவேண்டிய நிலையேற்படும். இந்நேரங்களில் வானத்தில் இடியோசையேற்பட்டால், விவசாயிகளிடத்திலே அச்சம் கூடிவிடும். மழை அவசியமற்ற நிலையில் மழைபெய்து செய்கையை அறுவடை செய்யவிடாமல் அழித்துவிடுமோ? என்ற மனப்பயத்தினை உண்டாக்கிவிடும். கடந்த காலங்களில் அறுவடை காலத்தில் மழை பெய்து வீட்டிற்கு ஓரிரண்டு, நெல்மூடைகளுடனும் விவசாயிகள் வீடு சேர்ந்த வரலாறுகளும் உள்ளன. அவ்வாறான சம்பவங்களினால்தான் மண்ணில் விதைஇட்டதிலிருந்து வீட்டிற்கு கொண்டுவரும் வரையும் தளர்ந்த, ஐய மனநிலையோடு விவசாயிகள் வாழ்ந்துவருகின்றனர். அவ்வாறான மனநிலைகளோடுதான் தாமும் இருப்பதாக வெள்ளையனும், வீரசிங்கமும் பேசிக்கொண்டனர்.

தம்முடன் பணவசதிகள் இல்லாதபோதும், மற்றவரிடம் கடனைப்பெற்று விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகள். வட்டியுடன் வாங்கிய முதலையும் கொடுத்து கடனில் இருந்து விடுபடுவதற்காக எதிர்பார்த்திருக்கின்ற எதிர்பார்ப்புக்கள் இயற்கையின் செயற்பாடுகளினால், வீணாகி செல்வதன் விளைவால் மீண்டும் கடனாளிகளாக்கப்பட்டு, இற்றைவரை சுயமாக விவசாயத்தினை மேற்கொள்ளமுடியாதவர்களாவே இருந்து கொண்டிருப்பதாக கூறிய வீரசிங்கம். மழைபெய்வதற்கு ஆரம்பித்துள்ளமை மகிழ்ச்சியாகவிருப்பதாகவும், இம்மழை தொடர்ச்சியாக பெய்து வெள்ளத்தினை ஏற்படுத்திவிடக்கூடாதெனவும் கூறியதோடு, மழையின்மையால் ஒருகாலப்பகுதியில் குடிநீருக்காக போராடுகின்றோம். விவசாயத்தினை மேற்கொண்டுவிட்டு சில நேரங்களில் இயற்கையின் செயற்பாடுகளினால் மனமுடைந்து செல்கின்றோம். எக்காலமும் நிம்மதியை பெற்றுக்கொள்ள முடியாதவர்களாவே இருந்து விடுகின்றோம் எனக்கூறிக் கொண்டு வீரசிங்கமும் பாவற்கொடிச்சேனைப்பக்கமாக செல்ல, வெள்ளையனும் கரடியனாறு பக்கமாக சென்றான்.

**படுவான் பாலகன்**

### மக்களிடையே இயற்கை பசளைப்பாவனையை அதிகரிக்க வேண்டும் - மட்டு. மாவட்ட அரச அதிபர்

மக்களிடையே இயற்கை பசளைகள், உரமூட்டிகளின் பாவனை குறைவடைந்துள்ளது. இதில் மாற்றம் ஏற்படவேண்டும். எனவே இராசாயனப் பாவனையைக் குறைத்து நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அடைச்சகல் நீர்ப்பாசனக் குளத்தின் கீழான விசேட இடைப்போக நெற்செய்கை அறுவடை விழா ஒதியங்குடாறு பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. இவ் விழாவில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், இது அறுவடை விழா அல்ல. இது ஒரு வெற்றி விழா. விவசாயிகளின் முயற்சிக்கும், கஸ்டத்திற்கும் கிடைத்த வெற்றியாகவே இதைக் கருதுகிறேன். விவசாய நடவடிக்கைகளுக்கு இந்நாட்களில் செயற்கை இரசாயனங்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. இயற்கை உரமூட்டிகளின் பாவனை குறைவாகவே காணப்படுகின்றது என்றார். நிகழ்வில், பொறியியலாளர்கள், கமநல அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# பட்டறிவு

## ஜே.ஆரால் மீண்ட ஜப்பான்



இரண்டாம் உலக யுத்தத்தில் ஜேர்மன், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் ஏனைய மேற்கத்தையே நாடுகளுக்கும் இடையில் கடும் போர் நிகழ்ந்து வந்தது. இந்தப் போரில் கிழக்காசிய நாடுகளை ஒன்றன் பின் ஒன்றாக கைப்பற்றி வந்தது ஜப்பான். பல நாடுகளின் மீது போர் தொடர்ந்தும் இருந்தது. 1941இல் அமெரிக்காவையும் தாக்கியது.

ஐரோப்பாவில் ஜெர்மனை வீழ்த்துவதில் ரஷ்யா பெரும்பங்கு வகித்தது. அது போல ஜப்பானில் 1945 ஒகஸ்ட் மாதம் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களில் அமெரிக்கா அணுக்குண்டை போட்டு பாரிய மனிதப் பேரழிவை நடத்தியதுடன் மட்டுமன்றி அந்த நாட்டை பெரும் சேதத்துக்கு உள்ளாக்கி சரணடைய வைத்தது. அத்தோடு இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்தது.

ஜப்பான் இராணுவம் கலைக்கப்பட்டது. ஜப்பானை குற்றம் சாட்டி அமெரிக்காவின் நிரந்தர இராணுவத் தளம் அங்கு அமைக்கப்பட்டது. ஆசியாவில் உள்ள அமெரிக்காவின் மிகப் பெரிய விமானப்படைத்தளம் ஒக்கினாவில் தான் அமைந்துள்ளது.

இரண்டாம் உலகப்போரை அதிகாரபூர்வமாக முடிவுக்கு கொணர்வதற்காக 08.09.1951 அன்று சான் பிரான்சிஸ்கோ நகரில் 48 நாடுகள் சமாதான மாநாடொன்றை கூட்டினார்கள். மாநாட்டு மண்டபத்துக்கு வெளியில் 51 நாடுகளின் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. ஜப்பானின் கோடி மட்டும் அங்கு காணப்படவில்லை. ஆனால் ஜப்பானை வரவழைத்திருந்தனர்.

அங்கு உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் “ஜப்பான் இதற்கு மேல் ஒரு இராணுவ அரசுமல்ல, இரகசிய சமூகமும் அல்ல. அது புனருத்தாபனம் செய்யப்பட்ட நாடு. யுத்த உரிமையை கைவிட்டிருக்கிற அந்த நாட்டுக்கு பாதுகாப்பளிக்கும் கடமை ஐ.நாவுக்கு உண்டு” என்றார்.



அந்த மாநாட்டின் இரண்டாவது நாள் அனைத்து நாடுகளும் கையெழுத்திடுவதற்கான சமாதான ஒப்பந்தம் தயாராகியிருந்தது. ரஷ்யா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்கள் ஜப்பானின் மீது மேலும் தடைகளை போடவேண்டும் என்று உரையாற்றினர்.

ஏற்கனவே, ஹிரோஷிமா, நாகசாகி மீதான அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சால் சின்னாபின்னமான தேசத்தை அப்போதுதான் மீட்டெடுக்கும் பணியை தொடங்கியிருந்த ஜப்பானுக்கு, இந்தப் பிரேரணை இன்னொரு அழிவென பதறியது. அந்த நிலையில், ஜே.ஆரின் அந்த உரை இழப்பீடு குறித்த அந்தத் தீர்மானத்தை அந்த மாநாடு கைவிடுவதற்கு முக்கிய காரணமானது.

ஜப்பானுக்கு ஆதரவாக ஜே.ஆரின் பிரசித்தி பெற்ற சான் பிரான்சிஸ்கோ உரை

இரண்டாம் உலகயுத்தத்தில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான இழப்பீட்டை ஜப்பான் வழங்க வேண்டும் என்கிற தீர்மானத்தை கொண்டு வந்தனர். அந்தத் தீர்மானம் மனிதாபிமானமற்றது என்று நீண்ட உரையாற்றினார் இலங்கை பிரதிநிதியாக கலந்துகொண்ட அன்றைய நிதியமைச்சர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன.

அந்த பேச்சு மிகவும் பிரசித்தமானது. பல வல்லரசு நாடுகள் ஜப்பானிடம் நட்ட ஈட்டை அறவிடுவதற்கான கோரிக்கைகளை உறுதியாக அந்த மாநாட்டில் முன்வைத்தபோது வறிய நாடான இலங்கையின் பிரதிநிதி தமக்கு எந்த நட்ட ஈடும் வேண்டாம் என்றார். அது ஜப்பானின் பொருளாதாரத்தை மேலும் பாதிக்கும் என்றார். “அதிர்ஷ்டவசமாக எங்கள் நாடு ஆக்கிரமிப்புக்கு உள்ளாகவில்லை, ஆனால் விமானத் தாக்குதல்களினால் சேதங்களை உருவாக்கியிருந்தது….” என்றார்.

“அன்பாலன்றி, வெறுப்பை வெறுப்பால் துறக்கும் வழியில்லை” என்கிற புத்தரின் தம்மபதத்திலிருந்து மேற்கோள் காட்டி தொடங்கிய அந்தப் பேச்சை அவர் முடித்ததும் அதே தம்மபத மேற்கோளைக் காட்டித்தான்.

இந்தப் உரையும் ஜப்பானுக்கு ஆதரவான பிரேரணையும் முடிந்ததும் பல நாட்டுத் தலைவர்களும் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரித்தனர்.

இத்தனைக்கும் 2ஆம் உலகப்போரில் ஜப்பானால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் உள்ளடங்கும். ஜப்பானிய விமானங்களால் கொழும்பு துறைமுகம், இரத்மலானை விமானத்தளம் (05.04.1942), திருகோணமலை துறைமுகம் (09.04.1942) ஆகியன தாக்கப்பட்டிருந்தன.

ஜப்பானை தண்டிக்கவேண்டும், நட்ட ஈட்டை சுமத்த வேண்டும் என்றிருந்த நாட்டுத் தலைவர்கள் அந்த உரையின் பின்னர் உருகினார்கள். ஒரு வசதி குறைந்த நாடொன்றே தமக்கு எதுவும் வேண்டாம், நலிந்த ஒரு நாட்டை மேலும் கஷ்டத்தில் தள்ளாதீர்கள் என்று கூறியதை கேட்டு தமது முடிவைக் கைவிட்டார்கள்.

அந்த பிரேரணை மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தால் ஜப்பான் கொரியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் ஜப்பானை மூன்றாக பிளவுபடுத்தி தனித்தனியாக ஆண்டிருக்கும். ஜப்பான் என்று இன்று இருக்கிற நாடே வரைபடத்தில் இருந்து காணாமல் போயிருக்கும் என்று கூறுவார்கள்.

ஜப்பான் மீண்டு எழுவதற்கு கைகொடுத்த ஜே.ஆரின் இந்த உரை அந்த நாட்டு மக்களுக்கு நெகிழ்ச்சியான வரலாற்று நினைவாக ஆக்கியிருக்கிறார்கள். ஜப்பானின் புத்தரின் படத்துக்கு அடுத்தபடியாக ஜே.ஆரின் புகைப்படத்தை வைத்து மரியாதை செய்த காலம் ஒன்று இருந்தது. இன்றும் பல வீடுகளில் அதனைக் காண முடியும். அந்த சம்பவத்தை அவர்கள் “மறு சுதந்திரம்” (“Re-independence”) என்கிற வார்த்தையால் அழைக்கிறார்கள். ஜே.ஆர். ஜெயவர்தனவுக்காக பல பௌத்த விகாரைகளில் நினைவுத்தூபி எழுப்பியிருக்கிறார்கள். அதில் அவரின் பிரசித்திபெற்ற “அன்பாலன்றி, வெறுப்பை வெறுப்பால் துறக்கும் வழியில்லை” தம்மபதம் என்கிற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

மிகக்குறுகிய காலத்தில் ஜப்பான் உலகத்தில் ஏனைய வல்லரசுகளுக்கு நிகராக பொருளாதார ரீதியில் வளர்ந்து வந்ததும்; அந்த வரலாற்றுபூர்வமான நன்றிக்காக பல உதவிகளை இலங்கைக்கு செய்திருக்கிறது. இன்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முன்னணி நாடாக ஜப்பான் திகழ்கிறது. சமாதான பேச்சுவார்த்தை காலத்தில் ஜப்பான் சமாதான தூதுவர்களில் ஒன்றாக பாத்திரமாற்றியிருந்தது. சமாதான காலத்தில் நோர்வே வழங்கிய நிதியுதவிகள் போலவே ஜப்பானும் சமாதானத்துக்காக கோடிக்கணக்கில் நிதியுதவி வழங்கியது. யுத்தத்தின் பின் மீள் குடியேற்றத்துக்கும், பின்னர் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக 03 பில்லியன் நிதியையும் கொடுத்துதவியது.

1953இலேயே இலங்கையில் ஜப்பான் தூதரகத்தை நிறுவியது. ஜே.ஆர். ஆட்சிக்கு வந்ததன் பின்னர் ஏராளமான நிதியுதவிகளையும், கடனுதவிகளையும் வழங்கியது. மேல்கொத்மலை மின்னுற்பத்தித்திட்டம், கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டம், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதி, கட்டுநாயக்க விமானநிலைய அபிவிருத்தி, டெலிகொம் திட்டம், இரயில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், பாலங்கள் அமைப்பது என்று ஒரு தொகை அபிவிருத்திப் பணிகள் ஜப்பானின் உதவியால் இலங்கை பலனடைந்திருக்கிறது.

இலங்கையின் அடிப்படை உட்கட்டமைப்பு சார்ந்த திட்டங்கள், பேராதனை, ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிகள் வைத்திய பரிசோதனை நிலையங்கள் என்பன மட்டுமல்ல இலங்கையின் ரூபவாஹினி நிறுவனத்தையும் ஜப்பான் தான் அன்றே அமைத்துக்கொடுத்தது. சுனாமி அழிவின் போது இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற 500 மில்லியன் அமெரிக்க டொலர்களில் 50%வீதத்தை ஜப்பான் தான் வழங்கியிருந்தது.

2013 ஆம் ஆண்டு இலங்கை – ஜப்பானிய ராஜதந்திர உறவின் 60வது ஆண்டு நிறைவையொட்டி அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபஷ ஜப்பான் சென்றிருந்த வேளை இலங்கையின் அபிவிருத்திக்காக 57.8 பில்லியன் ரூபாயை இலங்கைக்கு வழங்கியது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களின் போது இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்ததும் இந்தத தாமீக நன்றியுணர்வின் பின்னணியினால்தான். ஆனால் அந்த ஆதரவில் நியாயம் இல்லை என்பதை உணர்ந்ததும் வாக்களிப்பில் கலந்துகொள்வதைத் தவிர்த்தது.

**என்.சரவணன்**

ஏற்கெனவே ஜே.ஆர். நினைவாக ஜப்பானில் சிலைகளும், நினைவுக் கல்லும் சில இடங்களில் உள்ளன. ஜப்பானில் சுகியானோ பிரதேசத்தில் ஜே.ஆரின் சிலை பெரிய சிலையுடன் அவருக்கான அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. 2020இல் அது திறக்கப்படவிருக்கிறது. அந்த நாட்டில் வேறு நாட்டைச் சேர்ந்த ஒருவருக்காக கட்டப்படும் ஒரே ஒரு நினைவகம் அது மட்டும் தான். அங்கு அவரின் சான் பிரான்சிஸ்கோ உரை தினசரி ஒலிபரப்பப்படவிருக்கிறது.

இலங்கை செய்ததற்கு பேருதவிக்கு நன்றிக்கடனாக இன்னும் இலங்கையின் பிரதான நட்பு நாடாக பல காலம் கைமாறு செய்துவருகிற நாடுஜப்பான்.

# கலித்தொகை இன்பம்

## வந்தான் காண முடியவில்லை வந்ததை அவளும் அறியவில்லை



அது அருவிகள் நிறைந்த ஒரு மலை நாடு. பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோடி வரும் அருவிகளுக்கு அங்கே பஞ்சமில்லை. மலைச் சாரல்களிலே எங்கு பார்த்தாலும் மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த மலர்கள் வண்டுகளையும், தும்பிகளையும் தேனருந்த வாவாவென்று அழைப்பதுபோல இதழ்களை விரித்து மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

அங்கே ஒரு புலியும் யானையும் சண்டையிட்டுக்கொண்டிருக்கின்றன. வேங்கை மரத்தின் மலர்க்கொத்துக்களைப் போலப் புலியின் உடல் தோன்றுகின்றது. யானையோ வேங்கை மரத்தின் பூந்தளிரைப் போன்ற புள்ளிகளைத் தன் முகத்திலே கொண்டிருக்கிறது. அதனால் புலியின் உடலிலும் யானையின் உடலிலும், உள்ளவை மலர்கள் என்று எண்ணி மயங்கிய தும்பிகள் புலியின் மீதும், யானையின் மீதும் மாறிமாறி வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கின்றன. இந்தக் காட்சி எப்படியிருக்கின்றது தெரியுமா? வலிமைமிக்க வேந்தர்கள் இருவர் தமக்குள் போரிட்டுக்கொண்டிருக்கும் போது அவர்களிடையே சமாதானம் செய்துவைத்து அவர்களை நண்பர்களாக்க முயற்சி செய்யும் சிலர் மன்னர்கள் இருவரிடமும் மாறிமாறித் தூது சென்று அலைந்து கொண்டிருப்பதைப்போல, சண்டையிட்டுக்கொண்டிருக்கும் புலிக்கும், யானைக்குமிடையே சமரசம் செய்து வைப்பதற்காக அந்த இரண்டு விலங்குகளிடமும் தும்பிகள் மாறிமாறிப் பறந்து சென்று பேச்சுவார்த்தை நடாத்திக்கொண்டிருப்பதைப் போன்று தோன்றுகின்றது.

இப்படிப்பட்ட இயற்கைக் காட்சிகள் நிறைந்த மலைநாட்டைச் சேர்ந்தவன் தலைவன். அவனுக்குப் பக்கத்து நாட்டிலேயுள்ள ஒரு சிற்றூரிலே வாழ்ந்துவரும் அழகிய இளம் பெண்ணின் மேல் காதல் உண்டாகிறது. அவளுடைய மனதிலும் தலைவன் இடம்பிடித்துக் கொள்கிறான். நாட்டைக் கடந்து, ஊர்களைக் கடந்து நள்ளிரவு நேரத்தில் அவளைக் காணச் செல்கின்றான். அவளது ஊருக்குள் நுழைகின்ற அந்தத் தருணத்தில் திடீரென்று இடிமுழக்கத்துடன் கடுமையான மழை பெய்கின்றது. அவளின் வீட்டுக்குச் செல்ல அவனால் முடியவில்லை. நெடு நேரமாகியும் மழை விடுவதாயில்லை. தங்குவதற்கு இடமும் இல்லை. யாராவது இங்கே வந்த காரணத்தைக் கேட்டுவிட்டால் சொல்வதற்கு வழியுமில்லை. காதலியைப் பார்க்க வந்ததாகச் சொல்வது சரியுமில்லை. அவனுக்கு அதற்கான துணிவும் இல்லை. அப்படியே அவளைக் காணாமலேயே திரும்பிப் போய்விடுகிறான். ஆனால் தலைவியோ அவன் வருவான் வருவான் என்று வழிமேல் விழிவைத்துப் பார்த்திருக்கிறாள்.

காற்றோடு பெய்த மழையினால் அவளின் வீட்டருகே நொச்சிப் பூக்கள் விழுகின்றன. அந்தச் சத்தம் தலைவிக்குக் கேட்கிறது. தான் வந்துவிட்டதைத் தெரிவிக்க தலைவன்தான் நொச்சிப் பூவை விட்டெறிகிறான் என்றெண்ணித் அவள் வெளியே எட்டியெட்டிப் பார்த்துப் பலமுறை ஏமாந்து போகின்றாள். அதனால், தாங்கொணாத துன்பத்தில் தவிக்கிறாள். மறுநாள் காலை விடிகிறது. தலைவி வழமைபோல எழுந்திருக்கவேயில்லை. அவளைக் காணவந்த தோழி அவள் படுகின்ற துயரத்தைக் கண்டு கவலையடைகின்றாள். விடயத்தை அறிந்து, தலைவனைத் தேடிச் செல்கின்றாள். அவனைக் காணுகிறாள். அவனிடம் சொல்கிறாள்.

“அங்கே, அவள் உன்னோடு சேரவேண்டும் என்ற ஆசையால் வெதும்பிக்கொண்டிருக்கிறாள். இரவு முழுவதும் உனக்காகக் காத்திருந்தாள். நீ வந்துவிடவேண்டும் என்றும்; உன்னைக் கண்டுவிட வேண்டும் என்றும் கடவுள்களையெல்லாம் வேண்டினாள். இங்கே நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?” என்று கேட்கிறாள். தலைவன் தோழியிடம், தான் சொன்னபடி தன் காதலியைக்காண வந்ததையும். இடியோடு மழை பெய்ததையும், பகலில்கூடக் காணாமல் போய்விட்டோமே என்று தான் வருந்திக்கொண்டிருப்பதையும் எடுத்துரைக்கிறான்.

“மழையை வேண்டி வானை நோக்கிப் பாடுகின்ற வானம்பாடியைப் போல அவள் உன் வரவை வேண்டிக் காத்திருந்தாள். உன்னுடன் கொண்ட காதல் என்ற நோயினால் அவள் துடித்துக்கொண்டிருக்கிறாள். நீ என்னடாவென்றால் இப்படி வெறுப்படைந்தவன் போலப் பேசுகின்றாய். உனக்கு இரக்கமே இல்லை. உனது நாட்டிலுள்ள அருவிகள் நிறைந்த அழகுமிக்க மலையிடுக்குகள் ஒன்றையொன்று எதிரொலிப்பதைப் போல, உன்னைக் காணாததால் அவளுக்கு உண்டான நோய் உன் நினைவையே எதிரொலிக்கின்றது. அதனால், எப்படியாவது, ஏதாவது பொய்சொல்லியாவது அவளின் துன்பத்தை நீதான் போக்கவேண்டும், . இல்லையென்றால் அவள் தாங்கமாட்டாள்” என்று தோழி தலைவனிடம் சொல்கின்றாள்.

இந்தக்காட்சியினை வெளிப்படுத்தும் பாடல்:

வியலகம் புலம்ப வேட்டம் போகிய

மாஅல் அம்சிறை மணிநிறத் தும்பி

வாய்இழி கடாத்த வான்மறுப்ப ஒருத்தலோடு

ஆய்பொறி உழுவை தாக்கிய பொழுதின்

வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்

பூம்பொறியானைப் புகர்முகம் குறுகியும்

வலிமிகு வெகுளியான் வாள்உற்ற மன்னரை

நயன்நாடி நட்பு ஆக்கும் வினைவர்போல் மறிதரும்

அயம்இழி அருவிய அணிமலை நன்னாட!

ஏறு இரங்கு இருளிடை இரவினில் பதம்பெறாஅன்

மாறினென் எனக்கூறி மனங்கொள்ளும், தான் என்ப

கூடுதல் வேட்கையான் குறிபார்த்துக் குரல்நொச்சிப்

பாடு ஓர்க்கும் செவியோடு பைதலேன் யானாக.

அருஞ்செலவு ஆரிடை அருளிவந்து, அளிபெறாஅன்

வருந்தினென் எனப்பல வாய்விடூஉம், தான் என்ப

நிலைஉயர் கடவுட்குக் கடம்பூண்டு, தன்மாட்டுப்

பலசூழும் மனத்தோடு பைதலேன் யானாக

கனைபெயல் நடுநாள்யான் கண்மாறக், குறிபெறாஅன்

புனையிழாய்! என்பழி நினக்கு உரைக்கும், தான் என்ப

துளிநசை வேட்கையால் மிசைபாடும் புள்ளின், தன்

அளிநசைஇ ஆர்வுற்ற அன்பினேன் யானாக

எனவாங்கு,

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

கலந்தநோய் கைமிகக் கண்படா என்வயின்

புலந்தாயும் நீ ஆயின் பொய்யானே வெல்குவை

இலங்குதாழ் அருவியோடு அணிகொண்ட நின்மலைச்

சிலம்புபோல் கூறுவ கூறும்

இலங்குஏர் எல்வளை இவளுடை நோயே.

(கலித்தொகை, குறிஞ்சிக்கலி பாடல் இல: 10 பாடியவர்: கபிலர்)

## 'மட்டு. முயற்சியாண்மை × 2018' கண்காட்சி



(அதிரன்)

மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் 'மட்டு முயற்சியாண்மை – 2018' எனும் தொனிப்பொருளிலான சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வர்த்தக கண்காட்சி நவம்பர் 03,04,05 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு கல்லடி, சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 10.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை நடைபெறவுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களுக்கான ஒரு சிறந்த சந்தை வாய்ப்பாகவும் அமையவிருக்கின்ற இக் கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியும் என மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களின் கைவினைப் பொருட்கள், உணவு உற்பத்திகள், பனையோலை உற்பத்திகள், கைத்தறி உற்பத்திப்பொருட்கள், மட்பாண்ட உற்பத்திகள், சிற்பங்கள் மற்றும் பாதணிகள் என பல்வேறு உற்பத்திப்பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட இருக்கின்றன.


NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY
Are you 18+ and have GCSEs or work experience?
Do you have A levels but missed your place at university?
Foundation Degree Business (London Metropolitan University)
Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
HND Business (Pearson)
HND Hospitality Management (Pearson)
BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)
Student Finance Available
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556


NIRUTHA
HOTEL
NIRUTHA
அரங்கம் செய்திகளுக்கான
ஆதரவில் கைகோர்ப்போம்' -
ஹொட்டல் நிருத்தா
Hotline:
+94 717 412 292

# மட்டு மாநகர சபை

## கழிவு முகாமைத்துவம் பகுதி-௨

### கழிவு அகற்றுவதில் மக்களின் ஒத்துழைப்பும், விழிப்புணர்வும் தேவை



கழிவுகள் உக்கக்கூடிய, உக்காத கழிவுகள் என பிரிக்கப்படுகின்றன. உக்கக்கூடிய கழிவிலிருந்து மாதமொன்றிற்கு 12,000 கிலோகிராம் சேதனப்பசளை உற்பத்தி செய்யப்படுகின்றது. இதிலிருந்து வருடமொன்றிற்கு 6 லட்சம் ரூபாய் வருமானம் பெறக்கூடியதாய் உள்ளது. இதைச் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஒரு தடைவை சேதனப்பசளை தயாரிப்பதற்கு 3 மாத காலப்பகுதி தேவைப்படுகிறது. ஆதலால் கழிவு தரம்பிரித்தல் ஓரளவு ஒழுங்கான முறையில் நடைபெறுவதால் சேதனப்பசளை செய்வதற்கான இடப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. உக்காத கழிவு தரம் பிரிப்பது மிகவும் கடினமாக இருப்பதாகவும் இதற்காக பாரிய இயந்திரங்களை பயன்படுத்திய போதிலும் நூறுவீதம் தரம்பிரிப்பது கடினமாக உள்ளது.

2015ஆம் ஆண்டுசுற்றுச்சூழலுக்கான விருது மட்டக்களப்பு மாநகர



சபைக்கு கிடைக்கப்பெற்றபோதிலும் அதைத் தக்கவைக்க முடியாத நிலை உள்ளது எனவும், காரணம் இயந்திரங்களில் அடிக்கடி ஏற்படும் கோளாறும் கழிவகற்றலுக்கான இடப்பற்றாக்குறையுமேயாகும். இதனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் வழங்கப்படும் உறுதிப்பத்திரம் எடுப்பது கடினமாக உள்ளது எனவும் தெரிவித்தார் மாநகர சபை துணை ஆணையாளர். மேலும் கழிவுகளிலிருந்து உயிர்வாயு பெறப்படும் திட்டமானது மட்டக்களப்பு மாநகர சபையினதும் UNDP இனதும் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய 17.08.2018 அன்று மாநகர பொதுச்சந்தை தொகுதிக்குள்



**லியோண்**

“உயிர்வாயுக் கலன் “ அமைப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஊடாகப் பெறப்படும் எரிவாயுவை முதற்கட்டமாக கொள்வனவு செய்ய மட்டக்களப்பு பொலிஸ் விடுதி சமூகம் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

## நூலகர்களுக்கான கருத்தரங்கு




தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நூலக ஆளனியினருக்கான KOHA பயிற்சிக் கருத்தரங்கானது 29.10.2018 இல் மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாநகர சபையின் நூலகக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக்கருத்தரங்கினை மாநகர முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், உள்ளூராட்சி ஆணையாளர் சி.பிரகாஸ், மாநகர ஆணையாளர் க.சித்திரவேல், பிரதி ஆணையாளர் நா.தனஞ்செயன், ஏறாவூர் நகர சபையின் செயலாளர் சியாஹுல் ஹக், மாநகர நூலகக் குழுவின் தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான வே.தவராஜா ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

இக் கருத்தரங்கின் விரிவுரைகளை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட நூலகரும், இலத்திரனியல் நூலகத் திட்டத்தின் வளவாளருமான எம்.என்.ரவிக்குமார் நடாத்தினார்.


தற்காலத் தொழிநுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நூலகங்களிடையே நூலக மென்பொருள் பாவனையை நிறுவுவதோடு, அவற்றை இலத்திரணியல் நூலகங்களாக வடிவமைத்து வாசகர்களின் நூலகப் பயன்பாட்டினையும், வாசிப்பு பழக்கத்தினையும் அதிகரிக்கும் நோக்கோடு இந்த பயிறசிக் கருத்தரங்கு அமைந்திருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் நூலகங்களில் பணியாற்றும் 50 இற்கும் அதிகமான



நூலகர்கள் இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தனர்.

## மாநகர சபைக்கான வாகனத் தரிப்பிடத்தின் நிலைமை?





பயனியர் வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள மாநகர சபைக்குச் சொந்தமான வாகனத்தரிப்பிடம் சேறும் சகதியுமாக உள்ளது. இதனால் வைத்தியசாலைக்கு வருவோர் பெரும் அசௌகரியத்திற்கு ஆளாகின்றனர். இவ்விடத்தில் கட்டணம் அறவிடப்படுகின்றபோதிலும் தரிப்பிடமானது பராமரிப்பின்றி கிடக்கின்றது. மாநகரசபை இதனைக் கவனத்தில் கொள்ளுமா?

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---




மட்/மக்களின் புராதன தெய்வங்களும் வணக்கமும்

மட்டக்களப்புப் பகுதியிலே குடியேற்றங்கள் ஏற்பட முன்னர் இங்கு சில சாதியினர் வாழ்ந்தனர் என்பது கர்ண பரம்பரைக் கதைகளாலும், மட்டக்களப்பின் தெய்வ, வணக்க முறைகளாலும் அறியமுடிகிறது.

இப்படி வாழ்ந்தோர் வேடர், புலிந்தர், இயக்கர் ஆகிய சாதியினராய் இருந்திருக்கலாம். இவர்களே இலங்கையின் பூர்வீக குடிகளாவர்.

இவர்கள் தமக்கெனச் சில தெய்வங்களையும், வணக்கமுறைகளையும் கொண்டிருந்திருக்க வேண்டுமென்பதை இன்றும் மட்டக்களப்புப் பகுதியில் வாழும் வேடர், வேட வெள்ளாளர் எனப்படும் புராதன சாதியினரிடம் காணப்படுகிற தெய்வங்களையும் வணக்க முறைகளையும் கொண்டு அறிய முடிகிறது.

குமாரர் உத்தியாக்கள் தெவுத்தன் தெய்வங்கள் புராதன கிழக்கிலங்கைத் தமிழ்க் குடிகள் வணங்கும் தெய்வங்களும் அவற்றிற்கான பாடல்களும்

---

குமாரர்,(இவர் வழிபாடு பற்றிப்பின்னர் கூறப்படும்)

உத்தியாக்கள் (குழுவிலே இறந்த முன்னோர்கள்),

இவர்களுக்கான பாடல்

இறந்த ஆத்துமங்கள் வெடியப்பா கம் கமலோ பண வளலோ

பண வள வட்டியமதோ- ஒய கமதிரியல் ஒய கமணாய் மாறா (வேட்டையாடும் தெய்வம்) மாறாக்களில் பலவகையுண்டு அவையாவன பணிக்கன் (யானை கட்டும் தெய்வம்), வதனமாறா (மாடுகட்டும், வேட்டை ஆடுதலையும் செய்யும் தெய்வம்), பணிக்கமாறா (யானை பிடித்தலையும், வேட்டை யாடுதலையும்

செய்யும் தெய்வம்), இதற்கான பாடல்

---

மாறா மாறாண்டே தோறா தோறாண்டே கடுகம் புள்ளி மாறா விடுகம் புள்ளி மாறா கத்துள் மாறா கித்துள் மாறா

கித்துள் மல் மாறா தேம் பூச்சோ மல்மாறா

அம்ம எழுந்திரி மல்மாறா

செம்பனாச்சி, தெய்ய நாச்சி புள்ளி நாச்சி, வோமள் நாச்சி நமாள் நாச்சி பெய்யனாச்சி, கடனாச்சி, மறுமுந்த நாச்சி கடற்பகுதி (இவையாவும் கடல், மழை இவைகளைக் குறிக்கும் தெய்வங்கள்),

காட்டுத் தெய்வம் (காட்டைப் பரிபாலிக்கும் தெய்வம்),

தெவுத்தன் தெய்வங்கள்

---

குருணாகல் தெவுத்தன், மாத்தளை தெவுத்தன், கடவத்த தெவுத்தன், அல்லன தெவுத்தன், பாணகாவில் தெவுத்தன், பொல்லள தெவுத்தன் கல்லள தெவுத்தன், புள்ளிக்காறத் தெவுத்தன், மேச்சுக் குத்துற தெவுத்தன், (இவர்கள் ஒவ்வொரு பிரதேசத்தில் வாழ்ந்து இறந்துபோன குழுத் தலைவர்களாயிருந்திருக்கலாம்)

தெவுத்தன் பாடல்கள் (சில உதாரணங்கள்)

பாணங்காவில் தெவுத்தன் (05 பாடல்கள் உண்டு)

---

பாணகாவிலோ மங்கள் அத்துள் மையில் அண்ணா

தும்பாரியாவிலோ மங்கன் பாணங்கா

மாத்தள தெவுத்தன்

---

மாத்தளே மனனூறான் தும்பரியாவிலோ மங்கன்

கல்லள தெவுத்தன்

---

கல்லள கப்பாக் கடலே கல்மோதிரமோ தும்பாரியோ

விலோ மங்கன் கல்லளே

மாநீலியா, மறமுந்த, குருவிலிமுந்த, எரிகணுமுந்த, முக்காட்டுத் தெய்வம், இந்துமாள் நாச்சி முத்துமாள் நாச்சி, மானிலியம்மன் தெல்கிரியம்மன் அம்மன், பத்தினி அம்மன் ஆலாத்தித் தெய்வம்

பட்டாணி, புள்ளிக்காரன்,பொல்லுக்காரன், போன்ற தெய்ங்களை இவர்கள் வழிபடுகின்றனர். (இவை நோய் தருகிற தெய்வங்களாகும், ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு தெய்வமுண்டு)

இவை ஒவ்வொன்றிக்கும் பாடல் உண்டு.

கொட்டு என இவர்களால் அழைக்கப்படும் பறையில் எழும் தாளத்திற்கு இயைய இத்தெய்வங்கள் ஒருவரில் தோற்றம் பெறும் இவர்களின் பிரதான தெய்வம் குமார தெய்வமாகும். இத்தெய்வங்களுக்கெனப் பிரத்தியேக வணக்க முறைகளுமுண்டு. இவற்றிற்குத் தனிப்பட்ட கோயில் கிடையாது. கிராமத்தின் அல்லது காட்டின் மத்தியிலுள்ள குறிக்கப்பட்ட மரம் ஒன்றே கோயிலுக்குரிய நிலையமாகும். ஆண்டுக்கொருமுறை அவ்விடத்திற் பந்தலிட்டு இலை, குழை, தென்னை ஓலை, காட்டுப் பூக்கள் ஆகியவற்றாற் பந்தலை அலங்காரம் செய்து இத் தெய்வங்களுக்கென விசேட பூஜை செய்வர். அவ்வமயம் தெய்வத்தோடு சம்பந்தமுடைய பல நிகழ்ச்சிகள் நிகழ்த்திக்காட்டப்படும்.

கொட்டுக்கு ஏற்ப சன்னதம் கொண்டோர் ஆடும் ஆடலும், அது சம்பந்தமான சடங்கு முறைகளுமே இத் தெய்வங்களுக்குரிய வணக்க முறைகளாகும். வேட்டையாடும் வழக்கம் இப்பகுதியிலுள்ள வேட வேளாளரிடம் இல்லாவிடினும் அவர்களின் தெய்வங்கள் வேட்டையாடுதல், மந்தைமேய்த்தல், யானைகட்டல் போன்ற பழைய வாழ்க்கை முறைக்குரியனவாக இருப்பதும், கடல் வாழ்க்கைக்குரியனவாக இருப்பதும் கவனிக்கத்தக்கன.

தெவுத்தன் தெய்வம் அவர்களின் தலைவர்களைக் குறிக்கலாம். அல்லது பிற பகுதிகளிலிருந்து இவர்களுடன் இணைந்த தலைவர்களைக் குறிக்கலாம். இறந்த முன்னோரை வணங்கும் வழக்கம் (உத்தியாக்கள்) இவர்களிடம் இருப்பதும் இவர்களின் புராதனத் தன்மைக்கு உதாரணமாகும்.

இத்தெய்வங்களும் வணக்க முறைகளுமே மட்டக்களப்புப் பிரதேசத்தின் புராதன குடிகளிடம் காணப்பட்ட தெய்வங்களாகவும் வணக்க முறைகளாகவும் இருந்திருக்க வேண்டும்.

இவர்கள் வணக்க முறையில் புராதன வாழ்க்கை முறை காணப்படுவது பின்னால் விளக்கப்படுகிறது.



மட்/அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயிலில் வேடர்களே முன்பு வேல் வைத்து வணங்கினர் என்ற கதையும், கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர், மண்டூர்க் கந்தசாமி ஆகிய கோயில்கள் முன்பு வேல் வைத்து வேடர்களால் வணங்கப்பட்ட கோயில்கள் என்ற கர்ணபரம்பரைக் கதையும் ஆரம்பத்தில் இவ்வணக்க முறைகளே மட்டக்களப்பில் இருந்தன என்பதை மேலும் வலியுறுத்துகின்றன.

அம்மன், பத்தினி அம்மன் ஆகியவை பின்னால் வந்து சேர்ந்து புராதன குடிகளின் மத்தியிற் பரவிய தெய்வங்களாகலாம்.

பிற்காலத்தில் வெளிநாட்டார் குடியேற்றத்தினாலும், கலாசாரத்தினாலும் குமாரர், தெய்வக் கோயில்கள் பெரும் தெய்வக் கோயில்களாகியிருக்கலாம்.

இதன் பின்னரேயே சிவன்,விஸ்ணு, போன்ற வீராகம, ஆகம முறையில் பூசைகள் புரியும் பெரும் கோவில்கள் எழுந்திருக்க வேண்டும்.

வெளியிலிருந்து வந்த தெய்வங்களும் வணக்கமுறைகளும்

இப்போது மட்டக்களப்பில் பெருவழக்கிலுள்ள கிராமியத் தெய்வங்கள் பின்னால் வந்து மட்டக்களப்புப் பகுதியில் குடியேறியோர் கொணர்ந்த தெய்வங்களாயிருக்கலாம். இவற்றிற்குரிய வணக்க முறைகளும் இவ்வண்ணம் வந்திருக்க வேண்டும்.

கண்ணகியம்மன், மாரியம்மன், கங்கையம்மன், கம்பகாமாட்சி, காளி, படபத்திரகாளி, மாநீலி, குடா நீலி, வீரவள், இந்துமாநாச்சி, நாமனாச்சி, கடனாச்சி, பேச்சி அம்மன், வீரபத்தினி, வைரவர், ஐயனார், விறுமவைரவர், வீரபத்திரன், காத்தான், பெரிய தம்பிரான், நீலாசோதயன், நரசிங்க வைரவர், சிங்கநாத வைரவர், திரிசூல வைரவர், அனுமார் ஆகிய தெய்வங்கள் தென்னிந்தியா வினின்றும் இங்கு வந்து சேர்ந்த தெய்வங்களாம். இவைகளுட் பல தென்னிந்தியக் கிராமத் தெய்வங்களாக இருப்பதனாலும், இவற்றின் வணக்க முறை முன்சொன்ன குமார தெய்வ வணக்க முறையின்று சற்று மாறுபட்டுள்ளமையினாலும் இவை வெளியினின்று வந்தன என்றே கொள்ளக் கிடக்கின்றன. இத்தெய்வங்கட்கெனத் தனிப்பட்ட சிறுசிறு கோயில்களுமுண்டு. அத்தோடு தனிப்படத் தெய்வம் ஏறி ஆடுவோர் தம்மிஷ்டப்படி கொட்டுக்கு ஆடும் வழக்கம் இக்கோயில்களில் இல்லை.

இக்கோயில்களுக்கென ஒவ்வொரு கோயிலுக்கும் தனிப்பட்ட பூசகர் இருப்பார். இவர் பூசாரி என அழைக்கப்படுவர். அவருடைய மந்திர உச்சாடனத் திறனிங்க அவர் அழைக்கும் ஒரு தெய்வம் குறிப்பிட்ட ஒருவரில் வெளிப்படும்.

தெய்வம் பிடித்தவர் தெய்வமேறி ஆடுவார். உடுக்கொலிக்கு ஏற்ப அவர் அசைந்து அசைந்து ஆடுவார். அவரின் ஆடல்களுக்குத்தக பூசாரி பாடல்களைப் பாடுவார். இதற்கென மட்டக்களப்பில் சிறு தெய்வ வணக்கப்பாடல்களுள்ளன. தெய்வங்களை வசியம் பண்ணுதல், தெய்வம் ஆடுவோருக்கு மேலும் உருவேற்றுதல், அட்சரம் கீறுதல், அட்சரம் கீறி தம்பனம் செய்தல் போன்ற கிரியை முறைகளையும் இது உள்ளடக்கியுள்ளது. மட்டக்களப்பில் நெற் செய்கையின்போது இத்தெய்வங்களையே முதலில் வணங்கிக் காவலாக வைத்து நெற்செய்கையை ஆரம்பிப்பர். வயல்களைக் காவல் செய்ய வைரவரை வயல் வெளியில் வழிபடுகின்றனர். ஆண்டுக்கு ஒரு தடவையே இக்கோயில்கள் திறக்கப்பட்டுப் பூசை நடத்தப்படும்.

கண்ணகி, கோயில்கள் வைகாசி மாதத்தில் நடைபெறுவனவாம். மாரி, காளி கோயில்கள் ஆனி ஆடி மாதங்களில் நடைபெறும்.

உக்கிரமான இக் கோடை காலப் பகுதியில் நாடு குளிரவும், பயிர் செழிக்கவும் மழை வேண்டிக் குளுத்தி செய்கின்றனர். இவ்வணக்க முறைகளும், வேண்டுதல்களும் விவசாயப் பொருளாதார அமைப்பினைச் சார்ந்து நிற்பது புலப்படுகின்றது.

சில இடங்களிலே காளிகோயில் வழிபாடு சற்று மாறுபாடாய் உள்ளது. விசேடமாக ஏறாவூர்க் காளி கோயிலைக் குறிப்பிடலாம். இங்கே மந்திர உச்சாடனம், அட்சரம் வரைதல், தம்பனம் செய்தல், சன்னதம் கொண்டாடல், காவியம் பாடல் போன்ற பழைய முறைகளுடன் பிராமணர் ஆகம விதிப்படி செய்யும் பூசை முறைகளும் உண்டு.

(தொடரும்)

# மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரிய கல்வி வளர்ச்சி - சில அவதானங்கள்

பேராசிரியர் செ. யோகராசா

இலங்கையின் பாரம்பரிய கல்வி முயற்சி பற்றி குறிப்பிடும் நூல்களில் தமிழ்ப் பிரதேச பாரம்பரிய கல்வி பற்றிக் குறிப்பிடப்படுவது அரிதே. அண்மைக் காலமாகவே தமிழ் ஆய்வாளர்கள் சிலர் இத்தகைய முயற்சியில் ஈடுபாடு காட்டிவருகின்றனர். இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலில், கிடைக்கின்ற சான்றுகளின் படியாகவே மட்டக்களப்புப் பிரதேச பாரம்பரியக் கல்வி வளர்ச்சி பற்றிய இம்முயற்சி இடம்பெறுகின்ற தென்பதனை முதற்கண் குறிப்பிடுவது அவசியமாகும் எனினும் மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரியக் கல்வியின் வரலாறு பற்றி கவனிப்பதாகவன்றி பாரம்பரியக்கல்வி முறைகள் பற்றிய அவதானிப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவே இம்முயற்சி இடம்பெறுகின்றது.




மேற்கூறிய விடயம்பற்றி சிந்திக்கும்போது திண்ணைப் பள்ளிக் கல்விமுறை முதற்கண் அவதானிப் பிற்குரியதாகின்றது. இலங்கையில் பரவலாக நிலவி வந்துள்ள இக்கல்வி முறை மட்டக்களப்பு பிரதேசத்திலும் நிலவி வந்துள்ளது. திண்னணப்பள்ளி என்பது, குருவின் வீட்டுத்திண்ணையில் நடைபெற்று வந்த கல்வி முறையாகும்.

இங்கே " திண்ணை " என்பது வீட்டின் கூரைகளை நீட்டி தாழ்வாரத்தில் ஏறத்தாழ 5 அடி அகலமும் 1012 அடி நீளமும் கொண்ட நிலப்பரப்பாகும். இவ் இடத்தை களிமண் இட்டு மட்டப்படுத்தி சாணமிட்டு மெழுகுவர். இவ் இடமே வகுப்பு நடைபெறும் இடமாகும். இத் திண்ணையில் மாணவர்கள் பனையோலை, தாழோலை ஆகியவற்றால் பின்னப்பட்ட பாய்களில் இருந்து பாடம் படிப்பர், ஆசிரியரும் பாயிலிருந்து கொண்டே போதிப்பர். சில இடங்களில் நெல் குற்றும் உரலை கவிழ்த்து அதன்மேல் ஆசிரியர் இருப்பார். பனை ஓலை ஏடுகளில் எழுத்தாணியால் எழுதியே மாணவர்கள் படிப்பர். இவ் ஏடுகள் பனை ஓலையில் 2 1/2 அங்குல அகலமும் 10 - 12 அங்குல நீளமும் உள்ள சட்டங்களாக வெட்டி காயவைத்து மத்தியிலே துவாரமிட்டு கயிறு கோர்க்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஏட்டிலும் 10-12 ஓலைகள் இருக்கும். எல்லா ஓலைகளுக்கும் ஒரே அளவு நீள அகலமும் கொண்டு அமைந்திருக்கும்.

எழுத்தாணி என்பது கத்தியும் அதன் பின்புறத்தில் கூரான கத்தியும் பிடியும் சேர்ந்ததாகும். கத்தியை பிடியால் மடக்கி கூரான கம்பி வெளியே நீண்டிருக்க வைத்து அதனுதவிகொண்டு மாணவர் ஓலையில் எழுதுவர்.

இத்தகைய கல்வி முறை பற்றி அதற்குதவுவதாகவும் அரியதொரு சான்றாக இப்பிரதேசத்தில் பாடப்பட்டு வந்த " எண்ணைச்சிந்து " என்ற வாய்மொழிப்பாடல் அமைந்துள்ளது. குருவிற்கு "எண்ணை" முதலிய பொருட்கள் சேகரிப்பதற்காக சனிக்கிழமைகளில் மாணவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பாடும் பாடலே எண்ணைச் சிந்துப்பாடல் எனப்படும். இவ் எண்ணெய்ச் சிந்தினூடாக திண்ணைப்பள்ளி மாணவர்கள் தொடர்பாகவும் ஆசிரியர் தொடர்பாகவும் கற்பிக்கப்பட்ட பாடங்கள் தொடர்பாகவும் முக்கியமான விடையங்கள் பற்றி அறிய முடிகின்றது. மாணவர்களை பள்ளிக்குச் சேர்க்கும் வயது ஐந்து ஆகும். குறிப்பிட்டதொரு வெள்ளிக்கிழமையன்று மாணவர்கள் பச்சையரிசி, பழம், வெற்றிலை, பாக்கு, பூக்கள் என்பனவற்றுடன் குருவை தேடிச் செல்வர்.

அன்றைய தினம் ரேவதி நட்சத்திரம் முகூர்த்த வேளையில் பிள்ளையாருக்கு நிறைகுடம் வைத்து விளக்கேற்றி முக்கனி படைக்கப்பட்டு பாலபிஷேகம் செய்த பின்னர் சரஸ்வதியை நினைத்தவாறு ஆசிரியர் மாணவரைக் கொண்டு அரிவரியை எழுதுவிப்பர்.

"......................மொழி
எழுதப் பயின்று எழுதிமுடித்த பின்பு மொழிக்கு எழுத்து முறை முறையாகக் கற்பித்து கணக்கு வகைகள் கவனமாய் கற்பித்து இணக்க முடனெங்களுக்கு எழுத்து திரிபுகளும் எண் சுவடி குழிமாற்று ஏற்றமுள்ள வருக்க பாடம் திண்ணமாயின் றளவும் திறமையாய்" தொடர்ந்து கற்பிக்கப்படும்.

கற்பிக்கப்பட்ட பாடங்களாக எண்ணைச் சிந்துவின் ஒரு பதிப்பு மேற்கூறியவாறு குறிப்பிட்ட மற்றொரு பதிப்பு கணக்கு வகைகள் பற்றி வேறு விதமாக சற்று விரிவாகவும் (வாயிற் கணக்கு, பெயர்க்கணக்கு, தேசக்கணக்கு, நாட்கணக்கு, எண்ணற் கணக்கு) எழுத்து பிரிவுகள் என்று குறிப்பிட்டு ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை நன்னெறி நல்திவாகாரகண்டு ஈசன் மேற்பாடிய பாடல்கள் என்று புதியதாகவும் குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது.

zகுரு தட்சணையாக மாணவர்கள் வீடு தோறும் சென்று பச்சையரிசி, தேங்காய், பழம், வெற்றிலை, இஞ்சி, மிளகு, உள்ளி, புளி, வெங்காயம், பயற்றங்காய், கத்தரிக்காய், பூசணிக்காய், எண்ணை, வேட்டி, சவுக்காரம் முதலியன சேகரித்து கொடுப்பர்.

பொருள் சேகரித்துக் கொண்டு செல்லத் தாமதமாகின்ற வேளைகளிலோ பாடங்களை ஒழுங்காக செய்து முடிக்காத வேளைகளிலோ வழங்கப்படும் தண்டனைகளாவான பிரம்படி, கட்டியடித்தல், சுடுவெயிலில் நிற்பாட்டுதல், முசுருகளை கடிக்கச் செய்தல், நெற்றியில் கல் வைத்து விட்டு சூரிய ஒளியைப்பார்த்த வண்ணம் ஒற்றைக்காலில் நிற்க செய்தல், பன்றி சுருக்கிட்டு வெளியில் தள்ளி விடுதல், சவுக்கடி, கோதண்டத்தில் தூக்குதல், வீட்டிற்கு அனுப்பாது விடல் முதலியனவாகும்.

மேற்குறிப்பிட்ட கல்வி சமுகத்தில் உள்ள எவ்வகுப்பினரை சார்ந்திருந்தது என்பது பற்றி திட்டவட்டமாகக் கூற முடியாதுள்ளது எனினும் மாணவர்கள் குரு தட்சணைப் பொருட்களைச் சேர்க்க செல்லுகின்ற போது " செல்வக்குமார ரெல்லாம் சேரவே வந்து நிற்க " என்று குறிப்பிடுவதிலிருந்தும் குறிப்பிட்ட மாணவர் ஒருவர் தமது வீட்டிற்கு செல்லுகின்ற போது " வீட்டில் எண்ணெயில்லாவிட்டால் விடு காசு இல்லாவிட்டால் கேட்டு கடன் வாங்க " என்று குறிப்பிடுவதிலிருந்தும் வசதியுள்ள மாணவரும் ஏழை மாணவரும் அக் குழுவில் இடம்பெற்றிருந்தனர் என்று ஊகிக்க முடிவதனால் இத்தகைய கல்வியை ஏழை, செல்வந்தர் என்ற பேதமின்றி கல்வி நாட்டமுள்ள இரு சாரரும் பெற்றுக் கொண்டாரென்று கருத வாய்ப்புள்ளது. (தொடரும்)

# மூதாதையரின் காலடிகள்

## கொட்டியாரத்தின் வரலாற்று தொன்மையில் பெருங்கற்கால பண்பாட்டின் சம்பூர் சுடு மண் சிற்பங்கள்

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

மனித நாகரிகத்தின் தொன்ம வரலாற்றை வரலாற்று காலம் என தொல்லியல் வரலாற்றாரச்சியாளர்கள் பகுத்துள்ளனர்.

1 .பழங் கற்காலம்
2. புதிய கற்காலம்
3 .இடைக்கற்காலம்
4 .பெருங்கற்காலம்

என வரையறுக்கப் பட்டுள்ளது.

பழங் கற்கால பண்பாட்டில் கற்பாறைகளின் பயன்பாடும் கல்லாயுதங்களும் முக்கியப்பட இடைக் கற்காலம் புதிய கற் காலம் ஆகியவற்றில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறைகளையும் வெளிப்படுத்துவனவாக பாறை ஓவியங்களும் வேட்டை கருவிகளும் உலகெங்கும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.



புதிய கற்கால ஓவியங்கள்

பெருங்கற்கால மக்களின் வாழ்வியலில் புதை குழி கலாசரம் முக்கியப்படுகிறது. இதனோடு இணைந்தே சிறிய சுடு மண் சிற்பங்கள் முக்கியப்படுகின்றன. இதனை, 1823ம் ஆண்டு அப்போதைய மலபார் பகுதிகளில் (கேரள மாநிலம்), ஆய்வு செய்த பேபிங்டன் என்ற ஆங்கிலேய தொல்லியல் ஆய்வாளர் வெளி உலகுக்கு கொண்டு வந்தார். இவர், பெருங்கற்காலத்தில் வாழ்ந்த மக்களின் கலாசாரம், வாழ்வியல் முறைகளை, பல்வேறு ஆதாரங்களுடன் பதிவு செய்தார்.

தமிழ்நாட்டு சுடு மண் சிற்பம்

இதன் பின்பு தான், இந்தியாவின் தென்மாநிலங்களின் பல்வேறு பகுதிகளிலும், தொல்லியல் ஆய்வாளர்கள் பலர் பெருங்கற்காலம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டனர். பல கண்டு பிடிப்புகளையும் செய்தனர்.

தமிழகத்தில், ஈரோடு கொடுமணல், திருநெல்வேலி ஆதிச்சநல்லூர், நீலகிரி தெங்குமரஹாடா, மசினகுடி, கோத்தகிரி, ஏக்குனி, நீர்காய்ச்சிமந்து ஆகிய பகுதிகள், பல்வேறு வரலாற்று பதிவுகளை உள்ளடக்கியதாக உள்ளன.

நீலகிரியில், 1873ம் ஆண்டு அப்போதைய கமிஷனராக இருந்த பிரீக்ஸ் என்ற ஆங்கிலேயர், முதன்முதலாக, பெருங்கற்கால புதை குழிகளில் இருந்த சுடுமண் சிற்பங்கள் மற்றும் கலை பொருட்களை கண்டறிந்தார். அவரால் சேகரிக்கப்பட்ட, புராதான கலைப்பொருட்கள், சென்னை அரசு அருங்காட்சிகயத்திலும், லண்டன், பெர்லின் போன்ற பிரபலமான அருங்காட்சியகங்களிலும், இன்றும் பாதுகாக்கப்பட்டுவருகிறது

நீலகிரி சுடு மண் சிற்பங்கள்

பெருங்கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் இறந்து விட்டால், அவர்களின் சடலத்தை புதைக்கும்போது, அதனுடன், நம்முடன்



வாழும் கால்நடைகள் உட்பட பல்வேறு பொருட்கள், சுடுமண் சிற்பங்களை, போட்டு புதைத்து மரியாதை செலுத்துவதை அக்கால மக்கள் வழக்கமாக கொண்டிருந்தனர். இதனால், பெரும்பாலான புதை குழிகளில் இத்தகைய சிற்பங்கள் காணப்படுகின்றன.

கடந்த,1983, 84, 88, 91 ஆகிய ஆண்டுகளில், அமெரிக்காவில் உள்ள, சிக்காகோ மெக்சிகன் பல்கலைக் கழக பேராசிரியர் ஆலன் சாகிரல் என்பவர், தமிழ் நாட்டுக்கு வந்து, பெருங்கற்கால புதை குழிகள் பற்றி ஆய்வு செய்து, பல்வேறு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். அவை மாணவர்களுக்கான பாடங்களாகவும் உள்ளன.மேலும், இந்த கலாசார பரிமாற்றங்கள் அக்காலத்தில், நீலகிரியில் உள்ள மாயார் பள்ளத்தாக்கு, கேரளாவில் உள்ள பாலக்காடு பகுதிகளில் இருந்து தான், இந்த கலாச்சாரம் இங்கு பரவியுள்ளது என்பது ஆய்வுகளின் மூலம்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 9

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### புணர்ச்சி

- பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

1. பின்வருவனவற்றுள் தோன்றல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) வடபுலம் (2) காற்சட்டை (3) புனித தலம் (4) தலைக்கவசம்

2. பின்வருவனவற்றுள் திரிதல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) வடபுலம் (2) காற்சட்டை (3) புனித தலம் (4) தலைக்கவசம்

3. பின்வருவனவற்றுள் கெடுதல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) தலவிருட்சம் (2) பாலாடை (3) கிளிப்பிள்ளை (4) முட்செடி

4. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி
   (1) தலவிருட்சம் (2) பாலாடை (3) கிளிப்பிள்ளை (4) முட்செடி

5. பின்வருவனவற்றுள் கெடுதலும் தோன்றலும் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) பாடவேளை (2) கோலாட்டம் (3) வலக்கை (4) முட்செடி

6. பின்வருவனவற்றுள் கெடுதலும் தோன்றலும் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) தாழம்பூ (2) பனங்காய் (3) வாழைக்கறி (4) வானவில்

7. பின்வருவனவற்றுள் திரிதல் விகாரம் **இடம்பெறாத** புணர்ச்சி
   (1) பேசுங்கிளி (2) காற்சட்டை (3) ஆட்பதிவு (4) மாங்கனி

8. பின்வருவனவற்றுள் கெடுதல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) வான்கிளை (2) முயற்குட்டி (3) மணமாலை (4) மயிலாட்டம்

9. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி **அல்லாதது**
   (1) அழுதல் (2) தேரோட்டம் (3) மண்மேடு (4) மனவேதனை

10. பின்வருவனவற்றுள் கெடுதலும் தோன்றலும் **இடம்பெறாத** புணர்ச்சி
    (1) காலக்கண்ணாடி (2) வரவுத்தாள் (3) காலச்சக்கரம் (4) பழப்பாகு

11. உயிர் முன் உயிர் புணர்வதற்கு எடுத்துக்காட்டு
    (1) வாலாட்டல் (2) புளிக்காய் (3) கண்மடல் (4) கனியிதழ்

12. உயிர் முன் மெய் புணர்வதற்கு எடுத்துக்காட்டு
    (1) அலைகடல் (2) தண்கயம் (3) பனையோலை (4) கடலலை

13. மெய் முன் மெய் புணர்வதற்கு எடுத்துக்காட்டு
    (1) புலக்காட்சி (2) தலைமயிர் (3) படிதல் (4) கலையழகு

14. மெய் முன் உயிர் புணர்வதற்கு எடுத்துக்காட்டு
    (1) குணநலம் (2) மார்தட்டல் (3) கண்ணிமை (4) தண்ணீர்

15. உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்ததற்கு எடுத்துக்காட்டு
    (1) பாயை (2) நோயை (3) ஈயை (4) வாயை

16. உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்ததற்கு எடுத்துக்காட்டு
    (1) தலைவாசல் (2) தலையாட்டல் (3) தலைமயிர் (4) தலைச்சுமை

17. உடம்படுமெய் பெற்றுப் **புணராமைக்கு** எடுத்துக்காட்டு
    (1) விலாவென்பு (2) தேஞ்சுவை (3) தலையணை (4) தீயணைப்பு

18. பின்வருவனவற்றுள் குற்றியலுகரப் புணர்ச்சி
    (1) படைப்பாற்றல் (2) சுவர்வெடிப்பு (3) தெளிவாக்கல் (4) சில்லுவண்டி

19. பின்வருவனவற்றுள் வல்லினம் மிகுந்து புணர்ந்தமைக்கு உதாரணம்
    (1) பூங்கொடி (2) அவ்யானை (3) வாட்படை (4) வலைப்பின்னல்

20. வறள் + சி என்பதைப் புணர்த்தினால் வருவது
    (1) வரட்சி (2) வறட்சி (3) வரட்ச்சி (4) வறட்ச்சி

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குபரிசில் வழங்கப்படும். முடிவுத் திகதி : 08.11.2018.

அனுப்பவேண்டிய முகவரி : ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு

# கற்போம்

## கணிதம் கடினமல்ல

சஹானா ஜோசப்

இந்த வாரமும் நாம் தொடர்கள் பற்றிய கலந்துரையாடலை தொடர்வோம்.குறிப்பாக குறைந்து செல்லும் கணித தொடர்கள் பற்றிப் பார்க்கலாம். கீழ் உள்ள தொடரை அவதானிக்கவும்,

20,15,10,5,..

மீண்டும், இதில் வித்தியாசங்களை அவதானிப்பதனூடாக ஆரம்பிக்கலாம் முன்னையதிலிருந்து 5 கழித்தால் அடுத்த எண் வரும். முன்னைய கலந்துரையாடலில் இருப்பது போல் வித்தியாசங்களிலிருந்து n பெறலாம். இம்முறை வித்தியாசம் ( -5) ஆகவே நாம் n ஆக -5n.

அடுத்ததாக இத்தொடரின் 0ஆம் உறுப்பை கண்டு கொள்ளுங்கள்.

n 1 2 3 4 5

Sequence 20 15 10 5 0

சூத்திரத்தின் மிகுதியை அறிய 0 ஆம் உறுப்பை காணவேண்டும். 20 க்கு முன்னால் உள்ள எண் என்ன என்பதை நாம் கண்டுபிடிப்போம்.இதற்கு 20 + 5 கூட்டவேண்டும் 25 நமக்கு கிடைக்கும்

n 0 1 2 3 4 5

Sequence 25 20 15 10 5 0

இந்த எண் இப்போது உங்கள் சமன்பாட்டின் இரண்டாம் பகுதியாக மாறும்.

எனவே, உங்கள் சமன்பாடு -5 N + 25 இருக்கும். எனவே, 300-வது உறுப்பை கண்டுபிடி,

n = 300, ஆகவே -5 (300) + 25 = -1475

இதன் அர்த்தம் -725 இவ் வரிசையின் 150 ஆவது உறுப்பு ஆகும்.

இப்போது இந்த வார சவாலில் சென்று உங்களிடம் சரியான பதிலைத் தெரிந்துகொள்ள முடியுமா என்று பார்க்கவும். அடுத்த முறை நாம் பின்னோக்கி வரிசைக்கு வருவோம்.

***பின்வரும் தொடரின் 200வது உறுப்பை காண்க..***

6,9,12,15,18....

உமது n ஆம் உறுப்பு 3n+3 , 200வது உறுப்பை பெற n= 200 பிரதியிடுக

3(200)+3=603

ஆகவே தொடரின் 200வது உறுப்பு 603 ஆகும்

பின்வரும் தொடரின் 80வது உறுப்பை காண்க

-2,-6,-10,-14,-18...

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

- இலங்கையின் முதலாவது தேசாதிபதி / ஆளுநர் (பிரித்தானியர்)
  *பிரட்றிக் நோத் (1798 - 1805)*
- இலங்கையின் முதலாவது தேசாதிபதி (இலங்கையர்)
  *சேர் ஒலிவர் குணதிலக.*
- இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி / தேசபிதா
  *D.S.சேனநாயக்கா.*
- இலங்கையின் முதலாவது ஜனாதிபதி
  *வில்லியம் கோபல்லாவ.*
- இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி -
  *J. R. ஜெயவர்த்தன. (1978)*
- இலங்கையில் தோன்றிய முதல் செய்தித்தாள்
  *கொழும்பு ஜேர்ணல் (Colombo Journal)*
- இலங்கையில் தமிழில் வெளிவந்த முதல் நாளிதழ்
  *உதய தாரகை (1841 அமேரிக்க மிசனரியால்)*
- சிங்களத்தில் வெளிவந்த முதலாவது பத்திரிகை
  *சிங்களஹுட*

பக்க அனுசரணை

NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## கிழக்கு மாகாண விளையாட்டுத் துறைசார் உத்தியோகத்தர்களுக்கான திறன் அபிவிருத்தி பயிற்சி



மேற்படி பயிற்சியில் கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றிவருகின்ற அனைத்து உத்தியோகத்தர்களும் பங்குபற்றி இருந்தனர். கிழக்கு மாகாண



விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் என் எம் நௌபீஸ் அவர்களின் ஒழுங்கமைப்பில் ஊவா மாகாண விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் அது இடம்பெற்றது.



29 ந் திகதி தொடக்கம் 31 ந் திகதி வரை இடம்பெற்ற இப்பயிற்சி நெறியில் விளையாட்டு பயிற்சியின புதிய பயற்சி நுட்பங்கள், பயிற்சி திட்டமிடல் சிறுவர்களுக்கான பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் தலைமைத்துவம் கடந்த கால பெறுபேறுகள் எதிர்காலத்தில் அவற்றை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய உபாயங்கள் பற்றிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## நுவான் சொய்ஸா மீது குற்றச்சாட்டு



சர்வதேச கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் எதிர்ப்பு நியமங்களை மூன்று விடயங்களில் மீறியதாக இலங்கையின் வேகப்பந்து வீச்சுக்கான பயிற்றுவிப்பாளர் நுவான் சொய்ஸா மீது சர்வதேச கிரிக்கட் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

அவர் முதற்கட்டமாக உடனடியாக இடைநீக்கமும் செய்யப்பட்டுள்ளார்.

ஒரு பயிற்சி அரங்கில் கலந்து கொண்டிருந்தபோது, கொழும்பில் வைத்து நுவான் சர்வதேச கிரிக்கட் கவுன்ஸின் ஊழல் எதிர்ப்பு அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இப்படியான உயர் மட்ட குற்றங்களுக்காக விசாரிக்கப்படும் இரண்டாவது இலங்கை உயர் மட்ட கிரிக்கட் வீரர் இவராவார்.

ஆட்டங்களின் முடிவை முன்கூட்டியே தீர்மானிக்கும் ஊழல் ஒன்று குறித்த விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்ததாக இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய மீதும் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

## சம்மாந்துறை தேசிய கல்லூரியில் மாணவர்களுக்கு கராத்தே பயிற்சிவகுப்புகள்!





சம்மாந்துறை முஸ்லிம் தேசிய கல்லூரியில் International Martialarts Association இன் கராத்தே பயிற்சி வகுப்புகள் அதிபர் முத்துஇஸ்மாயில் முன்னிலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டன. பிரதி ஞாயிறு தினங்களில் தரம் 8, 9, 10ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு இவ்வகுப்புகள் International Martialarts Association இன் இலங்கைக்கான பிரதம போதனாசிரியரும், கிழக்குமாகாண கராத்தே சம்மேளனத்தலைவருமான சிஹான் முஹம்மத் இக்பால் அவர்களினால் நடாத்தப்பட்டுவருகின்றன.

படங்கள் காரைதீவு நிருபர் சகா

## விபுலாநந்தாவில் ஆசிரியர்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி.







சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியர்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்று நேற்று நடைபெற்றது.. ஆசிரியர்கள் போட்டியிடுபட்டிருப்பதைக்காணலாம்.

படங்கள் காரைதீவு நிருபர் சகா.

## இந்திய அணி வெற்றி



மும்பையில் இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையே நடைபெற்ற நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 224 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா பெரும் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 377 ரன்கள் எடுத்தது.


இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்கள் ரோகித் சர்மா மற்றும் ஷிகர் தவான் ஆகிய இருவருமே தொடக்கம் முதலே பந்தை எல்லைக்கோட்டுக்கு விரட்டினர்.

40 பந்துகளில் 38 ரன்களை எடுத்த தவான் ஆட்டமிழந்தவுடன், ரசிகர்களின் அதீத கரகோஷ வரவேற்புடன் களத்தில் நுழைந்த அணித்தலைவர் விராட் கோலி இம்முறை 16 ரன்களில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அதிரடியாக விளையாடிய ரோகித் சர்மா, 137 பந்துகளில் 162 ரன்கள் எடுத்தார். இதில் 4 சிக்ஸர்கள் மற்றும் 20 பவுண்டரிகள் உள்ளடங்கும்.

378 ரன்கள் என்ற கடினமான இலக்கை துரத்திய மேற்கிந்திய தீவுகள் 153 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்திய அணி சொந்த மண்ணில் ஒருதின போட்டிகளில் அதிக ரன்கள் வித்தியாசத்தில் வென்ற போட்டியாக இப்போட்டி அமைந்தது. மேலும் ஒட்டுமொத்தமாக இந்தியாவின் 3-வது இமாலய வெற்றி இது.

## உடற்கல்வி ஆசிரியர்களுக்கான திட்டமிடல் அமர்வு



மட்டக்களப்புக் கல்வி வலயத்துக்கான உடற்கல்வி ஆசிரியர்கள் தமது அடுத்த வருடத்துக்கான திட்டங்களை முன்வைப்பதற்கான அமர்வு சத்துருக்கொண்டான் சர்வோதய நிலையத்தில் நவம்பர் 5ஆம் திகதி நடக்கவிருக்கின்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் க. பாஸ்கரன் வழிகாட்டலில், இதனை வலயத்துக்கான உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. லவக்குமார் ஏற்பாடு செய்து வருகிறார். ஆசிரியர்கள் மத்தியில் பாட மற்றும் விளையாட்டுத்துறைத் திட்டமிடல்களை ஊக்குவிப்பதற்கான இந்த அமர்வு ஒவ்வொரு வருடமும் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

# மதுபாவனையில் உளநலம்

## மதுபாவனைக் கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை 2

### கொள்கைகள்

மதுவை உற்பத்தி செய்தல், பாவித்தல் என்பவற்றை இல்லாதொழித்தல். மதுபான வர்த்தகத்திற்கு ஏற்ற வகையில் விலைகள், வர்த்தக முதலீட்டு திட்டங்கள் என்பவற்றை நடை முறைப்படுத்தல். இலகுவாக கிடைக்கக்கூடிய, பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகளை கட்டுப்படுத்தல். வீட்டில், வேலைத்தளங்களில், பொதுமக்கள் கூடும் இடங்களில் பாவித்தலை கட்டுப்படுத்தல். மதுபாவனையால் ஏற்படுகின்ற வீதி விபத்துக்கள் உட்பட ஏனைய விபத்துக்கள், காயங்களை கட்டுப்படுத்தல். சமூக விழுமியங்களை பொதுமக்கள் மத்தியில் ஆழப்படுத்துவதன் ஊடாக மதுபாவனையை குறித்த எதிர்மறையான எண்ணங்களை ஏற்படுத்தல். மதுபாவனையில் ஏற்படுகின்ற, தீய விளைவுகள் குறித்த ஆராச்சிகளை மேற்கொள்வதோடு, ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதன் தாக்கத்தை கண்டறிதல். சமுதாய பங்களிப்புடன் இதற்கு சார்பான சேவைகள், புனர் வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். மதுபாவனை கட்டுப்பாடு, கொள்கை வகுப்புச் செயற்பாடுகளில் மது உற்பத்தி நிறுவனங்களின் செல்வாக்கு செலுத்துகையை கட்டுப்படுத்தல். நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் என்பவற்றிற்கு மதுபான கட்டுப்பாட்டு கொள்கையை தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு கொள்கையுடன் ஒத்திசைவாக செயற்படுத்தல்.



மேற் குறிப்பிடப்பட்டுள்ள, கொள்கைகளை அடைவதற்கு பின்வருவன இனங்காணப்பட்டு முன்னிலைப்படுத்துகின்றன. சந்தைப்படுத்தல். விலை, முதலீடு, வாணிபம் கிடைக்க கூடிய, பெற்றுக்கொள்ளக்கூடிய மது சம்பந்தப்பட்ட பொருட்கள். மதுபாவனையால் ஏற்படுகின்ற தீவினைகள் குறித்து பொதுமக்கள் அறிவதற்கான இடையீடுகள். குடித்துவிட்டு வாகனம் செலுத்துதல். சமுதாய செயற்பாடுகள். வழிமுறைகளை கண்காணித்தல், மதிப்பீடு செய்தல், ஆராச்சிக்கு உட்படுத்தல். ஆதரவு, புனர்வாழ்வு தளங்களை வலுப்படுத்துதல். மதுபாவனை உற்பத்தி நிறுவனங்களின் தலையீடுகளை கட்டுப்படுத்தல். திணைக்கள ஒழுங்கமைப்பு, நிதி வழங்குதல்.

நடைமுறைப்படுத்தலிற்கான மூலோபாயங்களும் கொள்கை வகுப்புகளும் மதுபாவனை குறித்து விளம்பரப்படுத்துதல், ஊக்குவித்தல் சந்தைப்படுத்தலை நேரடியாகவோ மறைமுகமாவோ இல்லாமல் செய்தல். மதுபாவனை குறித்த விளம்பரங்கள், சமூக செயற்பாடுகளிற்கான ஆதரவு, அனுசரனை வழங்குதல் போன்றவற்றை அங்கிகரிக்கப்பட்ட கட்டுப்பாட்டுச் சபையின் ஊடாக கையாலுதல். புதிய சட்ட விதிமுறைகளும், நடைமுறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு இதனூடாக வியாபார விளம்பரங்கள், ஏனைய வழி ஊக்கப்படுத்துதல் சமூக செயற்பாடுகளிற்கு மது உற்பத்தி நிறுவனங்களின் அனுசரணை, பொது இடங்களில் விளம்பரப்படுத்தல் என்பவற்றை கட்டுப்படுத்தல். புதிய கொள்கைகள், சட்டவிதி முறைகள் என்பவற்றின் ஊடாக திரைப்படங்கள், நாடகங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வாயிலாக பொதுமக்களிற்கு விளம்பரப்படுத்தப்படக்கூடிய சகல மதுபாவனை சம்பந்தப்பட்ட காட்சிகளை கட்டுப்படுத்துவதற்கு இவற்றின் தயாரிப்பாளர்கள், நெறியாளர்கள், நடிகர்கள் போன்றவர்களிற்கு அறிவூட்டுதல். வெளிப்படைத் தன்மையுடன் கூடிய கண்காணித்தல், சந்தைப்படுத்தல், பொறுப் புக்கூறல் என்பவற்றுடன் பொதுமக்களின் முறைபாடுகளை பெற்றுக்கொள்ளுதல், அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றை விரிவாக்கம் செய்து மதுபான பொருட்களை சந்தைப்படுத்தலில் கண்டுபிடிக்கப்படுகின்ற சட்டத்திற்கு விரோதமான செயற்பாடுகளை தீவிரமாக கண்காணிப்பதுடன், அதற்கான தண்டப்பணத்தையும் அதிகரித்தல். மதுபான போத்தல்களில் விளம்பரப்படுத்தப்படுகின்ற விளம்பரங்களில் மதுபாவனையின் நன்மைகள் குறிப்பிடப்பட்டு தீமைகள் குறிப்பிடும் போது ஒப்பிட்டு ரீதியாக மற்றையவற்றை விட ஆபத்து இல்லை அல்லது குறைவு போன்ற பிழையாக வழிகாட்டக்கூடிய எந்தவகையான சொற்களையோ, படங்களையோ பிரசுரிப்பதை தடுத்தற்கான சட்டங்கள், நடைமுறைகளை வகுத்தல். விலை, வாணிபம் முதலீடுகள் தீமை ஏற்படுத்தக்கூடிய மதுபாவனை நுகர்வை கட்டுப்படுத்துவதற்கு விலை, வாணிபம், முதலீட்டு கொள்கைகள் என்பவற்றில் உள்நாட்டு இறைவரிக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்தல். மதுபான உற்பத்திகளிற்கான விலையை அதிகரித்தல், மதுவரியை அதிகரித்தல் ஊடாக இறைவரி திணைக்களத்திற்கான வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் தீய விளைவுகளை ஏற்படுத்தும் அளவில் குடிப்பதை கட்டுப்படுத்தல். இதற்கு உலகளாவிய ரீதியாக



ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விஞ்ஞான பூர்வமான கொள்கையை கடைப்பிடித்தல். மதுபாவனை வகைகளிற்குரிய விலையேற்றதை எவ்வித தடையும் இன்றி பொதுமக்கள் அறிவதற்கான செயற்திட்டங்களை வகுப்பதோடு, விலையேற்றத்துடன் மதுபான வகைகளின் கொள்ளளவில் மாற்றங்கள் ஏதும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தல். மதுபான வகைகளை தயாரிப்பதற்காக அறவிடப்படுகின்ற வரிச்சலுகையை உற்பத்தி,விநியோகம், விற்பனை என்பற்றில் இலங்கையில் நடைமுறைப்படுத்தபடாமல் இருத்தல். தீர்வை அற்ற மதுபான விற்பனையை தடைசெய்தல், வெளிநாட்டு மதுபான வகைகளின் இறக்குமதி, விற்பனை என்பற்றில் நாடுகளிற்கு இடையில் இருக்கின்ற வர்த்தக நல்லுறவு ஒப்பந்தங்கள் எமது மதுபாவனை தொடர்பான கொள்கைகளிற்கு பாதகமாக இருக்காத வகையில் உடன்படிக்கைகள் கைச்சாத்து இடப்பட ஆவன செய்தல். மதுபான வகைகளை தயாரிப்பதற்கான இரசாயனங்களை இறக்குமதி செய்யும் போது மிக அவதானத்துடன் இருப்பதோடு அவை முறைகேடாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த ஆவன செய்தல்.

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

---

தொடர்ச்சி...

## ஊர் இரண்டுபட்டால் வெளியாருக்கே கொண்டாட்டம்

சமூகங்களின் மனங்களையும் வெல்லும் அளவுக்கு மாற்றும் முனைப்பை ஏற்படுத்த வேண்டும்.

சரி, இதெல்லாவற்றையும் இப்பொழுது என்ன செய்யலாம்? எப்படிக் கையாண்டு இந்தப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வரலாம்? என்பதே இன்று மக்களுடைய எதிர்பார்ப்புகளாகும்.

இதற்குத் தீர்வைக் காணவேண்டுமானால் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்வோரினாலேயே முடியும். பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் தரப்புகளும் உயர் நீதிமன்றமுமே இதில் ஆகக் கூடிய சக்தியுடையனவாக உள்ளது. ஆகவேதான் பாராளுமன்ற உறுப்பினர்களை மையமாக வைத்து இரண்டு தரப்பும் காய்களை நகர்த்துகின்றன. கயிற்றை இழுத்துக் கொண்டிருக்கின்றன.

ஜனநாயக அடிப்படையில் இதுவே வழிமுறை. ஆனால் இதற்குள் பாராளுமன்ற வழிமுறையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் அல்லது செல்வாக்கு வலயத்துக்குள் கொண்டு வருவதற்கு வெளிச்சக்திகள் முயற்சிக்கின்றன. இதில் வெளிப்படையாக அமெரிக்காக தலைமையிலான மேற்குலகும் இந்தியாவும் ஈடுபட்டுள்ளன. இதை ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் தெளிவாகவே இனங்காட்டியிருக்கின்றனர். ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு நாட்டிற்குள், நாட்டு விதிமுறைகளுக்குள் தீர்வைக்காணுவதே சரியானது. அதையே ஒரு ஆளுமையுள்ள தலைவர் செய்வார். இப்படி ஊரையும் உலகத்தையும் கூட்டி வைத்துக் கொண்டு, அழுது புலம்ப மாட்டார். இதிலிருந்தே ரணில் ஆளுமைக் குறைபாடு தெளிவாகவே தெரிகிறது. மட்டுமல்ல, வெளியாரிடம் ஒரு தகவலையும் சொல்லி விடுகிறார். "உங்களுக்காகவே நான் நாட்டில் வேலை செய்தேன். இப்பொழுது எனக்கு நெருக்கடி வந்திருக்கிறது. ஆகவே நீங்கள்தான் ஓடி வந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்றவாறாக.

ரணில் விடுத்த கோரிக்கையை ஒரு வழியாகவும் வாய்ப்பாகவும் எடுத்துக் கொண்ட வெளிச்சக்திகள் முழுதாகக் களத்தில் இறங்கி வேலை செய்கின்றன.

இதன் அடுத்த கட்ட வளர்ச்சி இலங்கைக்கு பல நெருக்கடிகளை உண்டாக்கப்போகிறது. ரணில் தரப்பு இந்தப் பிரச்சினையில் வெற்றி பெற்றாலும் அது மேற்கிற்கும் அமெரிக்காவுக்கா உள்ளிட்ட பங்காளிகளுக்கும் கட்டுப்பட்டே வேலை செய்ய வேண்டியிருக்கும். இல்லாது மைத்திரிபால சிறிசேன – மகிந்த ராஜபக்ஸ தரப்பு வெற்றியடைந்தால், இதே வெளிச்சக்திகள் பல நெருக்கடிகளை அந்த ஆட்சிக்கு ஏற்படுத்தும். அந்த நெருக்கடிகள் மக்களையே பாதிக்கும்.

ஆகவே இன்று உருவாகியுள்ள நெருக்கடி என்பது அரசியலமைப்பு மற்றும் ஆட்சித்தரப்பின் குறைபாட்டின் விளைவானவையே. அதேவேளை எதிர்த்தரப்பின் தலைமைத்துவப் போட்டியின் விளைவும் கூட. இதற்கான வாய்ப்பை அளித்திருப்பது பலவீனமான அரசியலமைப்பு.

இதை உணர்ந்து நாட்டிற்குள்ளே தீர்வைக்காண வேண்டிய பொறுப்பு அனைத்துத் தரப்பிற்கும் உண்டு. அதிகாரவெறி தலைக்குள்ளே நிரம்பியிருக்கும்போது எந்த ஆலோசனைகளையும் யாருடைய பேச்சையும் யாரும் கேட்க மாட்டார்கள். ஆனாலும் இது தவிர்க்க முடியாது. முன்பு இனமுரண்களால் நாடு நெருக்கடியில் சிக்கியிருந்தபோது அதை வாய்ப்பாகப் பயன்படுத்தி இந்தியாவும் மேற்குலகும் சீனாவும் நாட்டிற்குள்ளே தலையிட்டன. இப்பொழுது ஆட்சிக்குள்ளே ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைப் பயன்படுத்தி வெளிச்சக்திகள் உள் நுழையப்பார்க்கின்றன.

ஊரும் வீடும் இரண்டு பட்டால் வெளியாட்களுக்குத்தான் கொட்டாட்டம் என்று தெரியாமலா சொன்னார்கள்?

நமக்குள் விட்டுக்கொடுப்புகளைச் செய்யத் தெரியவில்லை. நமக்குள் உடன்பாடுகளைக் காண முடியவில்லை. நமக்குள் ஒருவரை ஒருவர் மதிக்கத் தெரியவில்லை. ஆனால், யார் யாருக்கோவெல்லாம் மதிப்பைக் கொடுக்கிறோம். இதை என்னவென்று சொல்வது?

தொடர்ச்சி...

# மூதாதையரின் காலடிகள்

தெரியவந்தது.

இந்த ஆண்டில் நீலகிரி மலை பகுதியில் தொல்லியல் ஆர்வலர் ரவிச்சந்தரன் மற்றும் குழுவினரால், உடைந்த நிலையில் சிதறி கிடந்த சுடுமண் சிற்பங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அப்போது, அப்பகுதியில் உள்ள புதைக்குழி, கிணறு வடிவ கல்லறை போன்றவை 2000 ஆண்டுகளை கடந்தும், பாதுகாப்புடன் இருந்தது வியப்பை ஏற்படுத்தி உள்ளது.

கிணறு வடிவ கல்லறையில் கிடைக்கப்பெற்ற, பெருங்கற்கால மக்களின், சுடுமண் சிற்பங்களில், எருமை, யானை, ஆடு, சிறிய சட்டிகள் ஆகியவை இருந்ததை அறிய முடிகிறது

இலங்கையில் தமிழர்களின் பூர்விக வாழ்விடங்களில் இத்தகைய சுடுமண் சிற்பங்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன

1960களில் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் ஸ்ரீலங்கா தொல்லியல் ஆணையாளர் கலாநிதி எஸ்.யு. தெரனியகலை சுடுமண் சிற்பங்களை கண்டெடுத்தார். இவையுடன் ஒத்தவையாக ஆனைவிழுந்தான் சிற்பங்கள் இருக்கின்றன. மல்லாவி சிற்பங்கள் இவற்றிலிருந்து வேறுபட்டு உள்ளன.

உருத்திரபுர சிற்பங்கள் 2000 ஆண்டுகளிற்கு முற்பட்டவை என எஸ்.யு தெரனியகலை தெரிவித்திருந்தார். இவற்றைவிட கிளிநொச்சி உருத்திரபுரத்தில் எடுக்கப்பட்ட சுடுமண் சிற்பங்கள் வவுனியா நகர ஸ்ரீலங்கா தொல்பொருட்கலைச்சாலையில் உள்ளன

2004ம் ஆண்டில் மல்லாவியிலும் இத்தகைய சிற்பங்களின் கண்டு பிடிப்பு நிகழ்ந்தது.

மல்லாவி சிற்பங்கள்

.மல்லாவியின் வயற்பகுதி ஒன்றில் வரம்புப் பாதை துப்பரவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில் சுடுமண் சிற்பங்கள்,மக்களால் கண்டெடுக்கப்பட்டன. பாதை துப்பரவுப் பணியின்போது மண்வெட்டிகளால் பொருட்கள் உடைபட்டுமுள்ளன. ஆனாலும் பின்னர் அவை பாதுகாப்பான முறையில் கையாளப்பட்டன..

இந்த சுடுமண் சிற்பங்கள் பெண் உருவங்களாக உள்ளன. அங்கு 5 மனித உருவங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஒன்று தலைப்பகுதியாக மட்டும் கிடைத்தது. மற்றொன்று தலைமுதல் இடுப்புவரையான பகுதியுடன் கிடைத்திருக்கிறது, இன்னொன்று தலை முதல் அடி வரையும்,மற்றொன்று தலை முதல் மார்பு வரையும், வேறொன்று முண்டமாகவும் கிடைத்துள்ளன

இதனைப் போலவே 2011ம் ஆண்டில் சாஸ்திரி கூழாங்குளத்தில் பொதுநோக்கு மண்டபம் ஒன்றிற்கு மண் இடுவதற்காக அருகிலுள்ள குளத்திலிருந்து மண் எடுக்கப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ளது. அவற்றை பரவும் போது அவற்றிலிருந்து சில மண் சிற்பங்களை மக்கள் கண்டெடுத்துள்ளனர்.

சாஸ்திரி கூழாங்குள சுடு மண் சிற்பங்கள் பின்னர் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் தலைமையிலான குழு வவுனியா சென்று குறித்த பகுதியை பார்வையிட்டதுடன் பொருமளவு சிற்பங்களை ஆய்வுக்காக யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்திற்கு கொண்டு சென்றனர்

இது குறித்து பேராசிரியர் புஸ்பரட்ணம் கருத்துப் பகர்கையில் இற்றைக்கு இரண்டாயிரத்து 200 வருடங்களுக்கு முற்பட்ட சிற்பங்களே அங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும்,

தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப் பட்டதைப்போன்று அந்த சிற்ப அமைவுகளைப்போன்றே இங்கு கண்டெடுக்கப்பட்ட சிற்பங்களும் உள்ளன என்று குறிப்பிட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த ஒரு பின்னணியிலேயே நாம் சம்பூரில் அண்மையில் கண்டெடுக்கப் பட்ட சுடு மண் சிற்பங்களையும் பார்க்க வேண்டும்.

சம்பூர் சுடு மண் சிற்பங்கள்

சம்பூரை உள்ளடக்கிய கொட்டியார பிரதேசம் தமிழ் மக்களின் பல்லாயிரம் வருட பழமை வரலாற்று சான்றுகளை கொண்டுள்ளது. வெருகல் பிரதேசத்து முதுமக்கள் தாழி,வெருகல் மலை பிராமி கல்வெட்டுகள் ,கட்டைபறிச்சான் கச்சகொடிமலை தமிழ் பிராமி கல்வெட்டு , சேனையூர் பெண்டுகள் சேனை தொல் அடையாளங்கள் என நீண்டு செல்லும் தொல்லியல் சான்றுகளில் முக்கிய திருப்பு முனையாக சம்பூரில் கண்டெடுக்கப் பட்ட சுடுமண் சிற்பங்கள் உள்ளன.

ஏனைய இடங்களில் காணப்பட்டதை விட இதில் செய்நேர்த்தி காணப்படுவதோடு பல ஒற்றுமைகளையும் காணலாம்.


இவை பெருங் கற்காலப் பண்பாட்டுக்குரிய ஆதாரங்களே. தமிழர்களின் மிகத்தொன்மையான கலை வடிவங்கள் சுடுமண் ஆக்கங்களிலேயே உள்ளன. சிந்துவெளி முதல் தமிழகம் ஆதிச்ச நல்லூர் வரை அதன் நீட்சி வன்னியிலும் இன்று சம்பூர் வரை நீண்டுள்ளதை இது நிருபிக்கிறது.தமிழரின் தொன்மை கலை சான்றுகளாக சுடுமண் சிற்பங்களே உள்ளன .அதுவே நம் பூர்விக கலை.அதன் தொடர்ச்சியே கற் சிற்பங்கள் .

சம்பூர் சுடு மண் சிற்பங்களில் உள்ள பெண்ணுருவங்கள், யானையின் வடிவம் முக உருவங்கள் விளக்கின் தாழ்பாள் போன்றவை தமிழரின் தொன்மை சிற்பக் கலையின் சுவடுகளோடு ஒரு தாழியின் எஞ்சிய பகுதியும் இங்கு காணப்படுகிறது. கிட்டத்தட்ட 2500 வருசங்களுக்கு முந்தய ஒரு நாகரிகத்தின் எஞ்சிய பதிவுகளாகவே இவற்றை இனங்கான முடியும் .

நீலகிரியில் கண்டெடுக்கப் பட்ட சிற்பங்களுக்கும் சம்பூர் சிற்பங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை அதன் அமைப்பிலும் நேர்த்தியிலும் தெரிகிறது.

இதில் ஆர்வத்தோடு செயல்படும் மதுரன், ரதன் ஆகியோருக்கு என் வாழ்த்துக்கள்.

## ராஜகோபுரத்திற்கு அடிக்கல்நடுவிழா!



2000 வருடங்கள் பழைமைவாய்ந்த வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கான இராஜகோபுர நிருமாணப்பணிகளை ஆரம்பித்துவைப்பதற்கான கால்கோள் இடும் நிகழ்வு ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க தலைமையில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயலாளர் எந்திரி பொன்னையா சுரேஷ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் க.விமலநாதன் என்போர் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.
படங்கள் காரைதீவு நிருபர்

தொடர்ச்சி...

## 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 17 வயது சிறுவன் கைது

இந்த நிலையில் சிறுமி கடத்தப்பட்டுள்ளார் என பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிசார் சிறுவனை வாழைச்சேனை பிரதேசத்தில் வைத்து கைது செய்ததுடன் சிறுமியை மீட்டனர். இதனையடுத்து கைதுசெய்யப்பட சிறுவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி...

## கிழக்கிலங்கையின் பழங்குடிகள் அல்லது பூர்வ குடிகள்

வழித்தோன்றல்களான “புலிந்தர்”களைப் பற்றிய மேலதிக தகவல்கள் எதனையும் அறிய முடியாதவர்களாகவே உள்ளோம். மகாவம்சம் மட்டுமன்றி, தீபவம்சம், வம்சத்தபகசினி, திவ்யவதனா போன்ற இலங்கையின் பண்டைய வரலாற்றை விளக்கும் நூல்கள் பலவும், இலங்கையில் குடியேற்றங்கள் நிகழ முன்னர், இலங்கையில் பௌத்த சமயம் பரவுவதற்கு முன்னர் வாழ்ந்த பூர்வீக குடிகளாக இயக்கர், நாகர்கள் என்போரைக் குறிப்பிடுகின்றன. 'மேலே காட்டப்பட்ட பெரும்பாலான ஜதீகங்கள் இலங்கையின் முதன்முதலாக இயக்கர்களே இருந்தனர் என்பதைக் கூறுகின்றன. ஆனால் எல்லாக்கதைகளும் இயக்கர் பற்றிய பகை நோக்கினையே கொண்டுள்ளன. புத்தர் இயக்கர்களைத் துரத்தினார் எனத் தீபவம்சம் கூறுகிறது. ஆனால் திவ்யவதனாவும் ஹியன்-சாங்கின் இரண்டாவது கதையும் சிம்களவே அவர்கைளத் துரத்தினான் எனக்கூறுகின்றன.' (பக் 69-70) எனக்குறிப்பிடுகிறார் குணவர்த்தனா. இலங்கையின் பண்டைய வரலாற்றை விளக்கும் நூல்கள், நாகர்கள் பற்றி நட்பு நோக்கினையே கொண்டுள்ளன.
(தொடரும்)

தொடர்ச்சி...

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 25

அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட போதும் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் அரசியல் அறியாமை மற்றும் பலவீனம் காரணமாகவும் அப்போதைய தமிழர் விடுதலை கூட்டணியின் மக்கள் நலன் பேணாத ‘வாக்குப்பெட்டி’ அரசியல் காரணமாகவும் இச்சமன்பாடு வெற்றியளிக்கவில்லை. அப்போதைய தமிழர் விடுதலை கூட்டணி வெற்றிக்கு தடையாயிருந்தது. இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி ஆதிக்கம் செலுத்துவது போல அன்று தமிழர் விடுதலை கூட்டணியில் தமிழரசுக் கட்சியே ஆதிக்கம் செலுத்திற்று. 1994ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கச் சுயேச்சைக்குழு வென்றிருக்குமானால் அன்றிருந்த அரசியல் சூழ்நிலையில் அதாவது சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஜனாதிபதியாக தலைமைதாங்கிய மட்டுமட்டான பெரும்பான்மையைக் கொண்டிருந்த அரசாங்கத்தில் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கச் சுயேச்சைக்குழுவின் உறுப்பினர் இணைந்து பெற்றிருக்கக்கூடிய அரசியல் அதிகாரத்தையும் அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தி 1977ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பொத்துவில் பகுதியின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்த அமரர் ம.கனகரட்ணம் அவர்களும் அவரது மரணத்தின் பின் நியமனம் பெற்ற திருமதி. ரங்கநாயகி பத்மநாதனும் மேற்கொண்ட அபிவிருத்தி பணிகளுக்குச் சமதையான அம்பாறை மாவட்டத் தமிழர்களைச் சமூக பொருளாதார ரீதியாகக் கைதூக்கி விடக்கூடிய பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கமுடியும். இது காலம் கடந்த ஞானம் எனினும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் இதனை ஒரு படிப்பினையாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் 1994ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலிலும் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கச் சுயேச்சைக்குழு வெற்றி பெறாமையால் ஏற்பட்ட பின்னடைவு ஏராளம்.

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலும் தொடர இருக்கின்ற 2020 ஆம் ஆண்டில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்ற பாராளுமன்றப் பொதுதேர்தலிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏமாற்று அரசியலை முற்றாக நிராகரித்து அதற்கு பதிலாக புதிய அரசியல் சமன்பாடு ஒன்றினை வகுத்துக் கொள்வதற்கு அம்பாறை மாவட்ட தமிழர்கள் தற்போதிருந்தே தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் ‘கிழக்குத்தமிழர் ஒன்றியம்’ அம்பாறை மாவட்டத் தமிழர்களை அரசியலில் வழிநடாத்த முன்வர வேண்டும். அம்பாறை மாவட்ட தமிழர்களும் கட்சி அரசியல் வேறுபாடுகளை களைந்து கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் பின்னால் அணிதிரள வேண்டும். இதுவே அம்பாறை மாவட்டத் தமிழ்ர்கள் தங்கள் எதிர்கால இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரேவழியாகும்.

(கட்டுரைத்தொடர் முற்றும்)


அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம் புலயவெளி
கேதார கௌரி விரத ஆரம்பம் - 2018
கேதார கௌரி விரதத்தினை அனுட்டிக்கும் அன்பார்ந்த அடியார்களே!
ஐப்பசி மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை தசமி திதியில் இவ்விரதம் ஆரம்பமாகி கார்த்திகை மாதம் 7ஆம் திகதி புதன்கிழமை, அமாவாசை திதியில் விரதம் நிறைவடைய இருக்கிறது. ஆகவே கேதார கௌரி விரதத்தை அனுட்டிக்கும் அடியார்கள் 19/10/2018 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வீட்டில் கும்பம் வைத்து விரதத்தினை ஆரம்பிக்கலாம்.
(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)


Rehoboth
ரெகொபோத்
No.19, Collet Lane, Batticaloa.
065 4343436
தித்திக்கும் திறப்பு விழா
05.11.2018
'ரெகொபோத்' இன் அறுசுவை உணவை சுவைத்து மகிழுங்கள்
விசேட நிகழ்வுகளுக்கு தேவையான பாரம்பரிய தென்னிந்திய சமையல் கலையில் தேர்ச்சி பெற்ற சமையல் வல்லுனர்களின் கைப்பக்குவத்தில் உண்டு மகிழவும், ஓடர் செய்து பெற்றுக் கொள்ளவும் முடியும்.
மதிய உணவுகள்
கோழி புரியாணி
மரக்கறி புரியாணி
சோறு
சிவப்பரிசிச் சோறு
இரவு உணவுகள்
பிட்டு
இடியப்பம்
தோசை வகைகள்
இட்லி
கறி வகைகள்
கோழிக் கறி
மீன் கறி
பருப்புக் கறி
கிழங்குக் கறி
என்பவற்றை சுத்தமாகவும் சுவையாகவும் 'ரெகொபோத்' இல் பெற்றுக்கொள்ளலாம்.
ரெகொபோத்
இல. 19, கொலட் லேன்,
மட்டக்களப்பு.
0654343436 / 0779666771


அரங்கம்
செய்திகள்
தீபாவளி முதல்...
www.arangamnews.com
புதிய மெருகுடன்,
மட்டுநகரில் இருந்து அதிக வீடியோக்கள் மற்றும் தகவல்களுடன்
அனைத்துலக தமிழர்களின் பார்வைக்காக,